விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 30 வெள்ளிக்கிழமை (14.07.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 207

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# கருணா குழுவின் ஆயுதங்களை களைய முடியாது என அரசாங்கம் அறிவிப்பு

## சண்டே ஸ்டான்டர்ட் செவ்வியில் ரம்புக்வெல

(கொழும்பு)

**விடுதலைப்புலிகளில் இருந்து பிரிந்து சென்ற கருணா குழுவினரது ஆயுதங்களை களைய முடியாது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.**

**கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளிவந்த 'சண்டே ஸ்டான்டர்ட்' என்ற ஊடகத்திற்கு பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல இதனைத் தெரிவித்துள்ளார்.**

கருணா குழுவினரது ஆயுதங்களை அரசாங்கம் களையாது. அரசாங்கம் மற்றொரு போரை விரும்பவில்லை.

பேச்சு மேசைக்குத் திரும்ப கருணா குழுவினரது ஆயுதங்களைக் களைய வேண்டும் என்று விடுதலைப்புலிகள் அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

கருணா குழுவினரது ஆயுதங்களை இந்த சூழலில் நாங்கள் களைய வேண்டும் என்று விடுதலைப் (10 ஆம் பக்கம் பார்க்க)

## தயா மாஸ்டரின் உடல் நிலை தேறிவருவதாகத் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஊடகப் பேச்சாளர் தயா மாஸ்டரின் உடல் நிலை தேறிவருவதாக கொழும்பு அப்பலோ மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

மாரடைப்புக் காரணமாக நேற்று முன்தினமிரவு கொழும்பு அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு நேற்று முற்பகல் சத்திரசிகிச்சையளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த சத்திரசிகிச்சைக்குப் பின்னர் தயா மாஸ்டரின் உடல் நிலை தேறியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகளின் ஊடகப்பேச்சாளர் தயா மாஸ்டர் அனுமதிக்கப்பட்டுள்ள அப்லோ மருத்துவமனையைச் சுற்றி பலத்த பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அவர் அனுமதிக்கப்பட்டுள்ள அறையைச் சூழவும் சிவில் உடையில் இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ச-5)

## நாகர்கோயில் பகுதியில் நேற்றிரவு தாக்குதல்!

(யாழ்ப்பாணம்)

நாகர்கோயில் முன்னரங்கப் பகுதியில் நேற்றிரவு 7 மணியளவில் கடுந்தாக்குதல் இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

சுமார் அரை மணிநேரமாக ஆட்லறி மற்றும் மோட்டார்த்தாக்குதல் இடம் பெற்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாகர்கோயில் கடற்பரப்பில் கடற்படையினருக்கும் விடுதலைப்புலிகளிற்கும் இடையே மோதல் ஏற்பட்டதையடுத்து ஆட்லறித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

எனினும் ஏற்பட்ட சேதவிபரங்கள் குறித்த எதுவும் தெரியவரவில்லை.

இதேவேளை நேற்று முன்தினம் நாகர்கோயில் பகுதியில் இடம் பெற்ற மோதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## வவுனியாவில் கிளைமோர்; ஓமந்தையில் நேரடி மோதல்

### மூன்று இராணுவத்தினர் பலி

(வவுனியா)

வவுனியாவில் நேற்று நடந்த இரு வேறு சம்பவங்களில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

வவுனியா கற்குளம் தாண்டிக்குளம் பகுதியில் கல்மடு என்ற இடத்தில் வீதி சுற்றுக் காவல் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது நேற்று மாலை 5 மணியளவில் கிளைமோர்த் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதில் இராணுவத்தினர் இருவர் பலியாகினர். ஒருவர் படுகாயமடைந்தார். அவர் வவுனியா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

இதேவேளை மாலை 5.30 மணியளவில் ஓமந்தை முன்னரங்க காவலரணில் இரு தரப்பினருக்குமிடையே மோதல் நடந்தது. இதில் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொருவர் படுகாயமடைந்தார்.



எனினும் விடுதலைப்புலிகளின் தரப்பில் ஏற்பட்ட சேதவிபரங்கள் எவையும் வெளியாகவில்லை. (ச-5)

## புளொட் வவுனியா பொறுப்பாளர் செட்டிகுளத்தில் சடலமாக மீட்பு

(வவுனியா)

புளொட் அமைப்பின் வவுனியா மாவட்ட பொறுப்பாளர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். வவுனியா மாவட்ட புளொட் அமைப்பின் பொறுப்பாளர் பவன் என்றழைக்கப்படும் ரட்ணம் சிறீஸ்கந்தராஜா (வயது 46) வவுனியா செட்டிகுளத்தில் சூட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

கடத்தப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டிருக்கலாமென சந்கேம் வெளியிடப்பட்டுள்ளது. இது குறித்து வவுனியாப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-5)

## புலிகள் மீதான கனடாவின் தடையால் தமிழர்களின் நிகழ்வுகளுக்கு தடையில்லை

### கனேடிய அமைச்சர் செவ்வி

(கொழும்பு)

கனடாவில் தமிழர்கள் அனைத்து நிகழ்ச்சிகளையும் நடத்தலாம் என்று கனேடிய பொதுசனப் பாதுகாப்பு அமைச்சர் ஸ்டொக்வெல் டே தெரிவித்துள்ளார்.

கனடாவில் மாவீரர் நாள் உள்ளிட்ட நிகழ்வுகளை நடத்துவதற்கு விடுதலைப்புலிகள் மீதான தடையால் தடங்கல் ஏற்படுமா என்ற கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கனடாவில் பல்லின பல்கலாசார மக்கள் ஒற்றுமையுடன் வாழ்கிறார்கள் என்பதற்கான அடிப்படையே அவர்களது வளர்ச்சியையும் கலை ,கலாசார முன்னேற்றத்தையும் கனேடிய அரசு ஆதரிக்கிறது என்பதால்தான் என்றும் தமிழர்கள் எத்தகைய நிகழ்வுகளையும் இதர சமூகங்களைப்போல நடாத்துவதற்கு உரிமையுடையவர்கள் என்றும் தெரிவித்தார்.

தடையின் பின்னரான காலத்தில் தமிழ்ச் சமூகத்தைச் சார்ந்தவர்கள் விழாக்களுக்கான மண்டபங்களைப் பெறுவது போன்ற சில விடயங்களில் சில தடங்கல்களை எதிர்கொண்டார்கள் என்பது பற்றி கேள்வி ஒன்றை முன்வைத்தபோது,

கனேடியர்கள் அனைவருக்கும் உள்ள உரிமை தமிழர்களுக்கும் உண்டு என்றும் அவ்வாறு இத் தடையின் பின் தமிழர்களுக்கு ஏதாவது முட்டுக்கட்டைகள் அல்லது நெருக்கடிகள் ஏற்பட்டிருந்தால் அந்த விபரங்களை அரசு அறிய விரும்புவதாகவும் அதனை நேர்த்தி செய்ய விரும்புவதாகவும் ஸ்ரொக்வெல் டே குறிப்பிட்டார்.

இலங்கை அமைதி முயற்சிகளில் பாரபட்சமற்ற நிலைப்பாட்டையே கனேடிய அரசாங்கம் மேற்கொள்கிறது என்று கூறிய அவர் , இரு பகுதியும் சமாதான பேச்சுக்களைத் தொடர வேண்டுமென்ற விருப்பத்தையும் தெரிவித்தார். (ச-5)

## இராணுவத்தின் தாக்குதலில் நான்கு போராளிகள் வீரச்சாவு

(திருகோணமலை)

திருகோணமலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதியில் இராணுவத்தினர் ஊடுருவி நடத்திய தாக்குதலில் நான்கு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

திருமலை மாவட்டம் தம்பலகாமம் பிரதேசத்தில் திருகோணமலை -கண்டி நெடுஞ்சாலையில் கடவானைக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

திருகோணமலை நகரில் இருந்து தென் மேற்கில் 20 கிலோ மீற்றர் தொலைவில் இத் தாக்குதலை இராணுவத்தினரின் ஊடுருவும் அணியினர் நடத்தியுள்ளனர்.

இத் தாக்குதலில் லெப்.கேணல் ஈசன் (முத்துலிங்கம் கலையரசன் ஈச்சந்தீவு ஆலங்கேணி), கப்டன் தீபன் (நாகராசா வேந்தன், பட்டித்திடல், மூதூர்), கப்டன் தனுசன் (வேந்தன், மட்டக்களப்பு), வீரவேங்கை கருணா (துங்கவேல் கருணாகரன், முள்ளிப்பொத்தானை, தம்பலகாமம்) ஆகியோர் வீரச்சாவடைந்தவர்கள் என்று விடுதலைப்புலிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கொழும்பு ராமகிருஷ்ணமிசன் பவள விழாப் போட்டிகள்

கொழும்பு ராமகிருஷ்ணமிசனின் புவளவிழாவினை முன்னிட்டு அகில இலங்கை மட்டத்தில், பாடசாலை மாணவர்களிடையே பின்வரும் தனிநபர், குழுப்போட்டிகள் நடைபெறவுள்ளன. பரிசுகளும், சான்றிதழ்களும் பிரதேச மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் வழங்கப்படவுள்ளன.

தனிநபர் போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் தத்தமது பிரிவுகளுக்குரிய தலைப்புகளில் ஒன்றைத் தேர்வுசெய்து குறித்த நிபந்தனைகளுக்கமைய ஆக்கங்களைப் படைத்து, பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் 04/08/2006 இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும் ஆக்கங்களில் மாணவர் பெயர், தரம், முகவரி, தொலைபேசி இல(இருப்பின்) பாடசாலை பெயர், முகவரி போன்ற விபரங்களைத் தெளிவாகக் குறிப்பிடவேண்டும் அனுப்ப வேண்டிய முகவரி.

'பவள விழாப் போட்டிகள்'
ராமகிருஷ்ண மிசன்
இல.40, ராமகிருஷ்ணவீதி,
கொழும்பு-06

குழுப்போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் தத்தமது பிரிவுகளுக்குரிய தலைப்புலிகளில் ஒன்றைத்தேர்வு செய்து, நிகழ்ச்சிகளைக் குறித்த நிபந்தனைகளுக்கமையத் தயாரிக்க வேண்டும். அத்துடன் தலைப்பு பங்குகொள்ளும் மாணவர் குழு, பொறுப்பாசிரியர், பாடசாலை முகவரி, தொலைபேசி இல(இருப்பின்) ஆகிய விபரங்களைப் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் 26/07/2006இற்கு முன்னர் எமக்கு அனுப்பி வைக்கவும் குழுப்போட்டிகள் செப்டெம்பர் மாதத்தில் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படவுள்ளன. இதன் விபரங்களை அனுப்பவேண்டிய முகவரி:-

திரு. சி.சிவமோகன்
செயலாளர்
ஸ்ரீராமகிருஷ்ண சேவாச்சிரமம்
மானிப்பாய் வீதி,
தாவடி தெற்கு, கொக்குவில்

மேலதிக விபரங்களுக்கு 0112-588253, 011-5513805(ராமகிருஷ்ணமிசன், கொழும்பு), 077-063100(செயலாளர்ஸ்ரீராமகிருஷ்ண சேவாச்சிரமம்) ஆகிய தொலைபேசி இலக்கங்களிற்குச் சகல நாட்களிலும்தொடர்புகொள்ளலாம். (அ)

# அனுமதிப்பத்திரமின்றி சாராயம் விற்றவருக்கு கடூழியச் சிறைவிதிப்பு

(துன்னாலை)

அனுமதிப்பத்திரமின்றி வீட்டில் வைத்து சாராய விற்பனையில் ஈடுபட்ட உடுப்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு கடந்த புதன்கிழமை 6 மாத கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன் ரூபா 50000 அபராதமும் விதிக்கப்பட்டது. வீட்டில் வைத்து சாராயம் விற்கப்படுவதாகக் கிடைத்த தகவலையடுத்து மதுவரித்திணைக்கள உத்தியோகத்தர்கள் குறித்த வீட்டிற்கு சென்ற வேளை அந்நபர் கையும் மெய்யுமாக பிடிபட்டார்.

அவருக்கெதிராக பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு விசாரணையின் போது அந்நபர் முன்னரும் இவ்வாறான சட்ட விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டமை நீதிபதி அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து 6 மாத கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன் ரூ.50000 அபராதமும் விதிக்கப்பட்டது. குறித்த அபராதத்தொகையை செலுத்தத் தவறில் மேலும் 6 மாதம் கடூழியச்சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்று நீதிபதி க.அரியநாயகம் உத்தரவிட்டார்.

அண்மைக்காலமாக உடுப்பிட்டிப்பகுதியில் சட்டவிரோத சாராய விற்பனையில் ஈடுபடுவோர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கவிடயமாகும். (அ-101)

# புனித-யாகப்பர் ஆலய வருடாந்த திருவிழா

ஊர்காவற்றுறை மேற்கு வீதியில் முன்நூறு ஆண்டுகளுக்கு மேல்பழமை வாய்ந்த ஆலயமான புனித -யாகப்பரின் வருடாந்த திருவிழா நாளை சனிக்கிழமை கொடி ஏற்றத்துடன் ஆரம்பமாகி ஆயத்த வழிபாடுகள் நடைபெற்று இம்மாதம் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருநாள் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து திருச்சொரூப பவனி ஆகியவற்றுடன் திருவிழா நிறைவு பெறவுள்ளது. (அ-72)

# பயங்கர ஆயுதங்களுடன் சென்ற பத்து இளைஞர்களுக்கு அபராதம்

அச்சுவேலி, நெல்லியடி, பகுதி தனியார் மினிபஸ் சாரதிகளுக்கிடையில் ஏற்பட்ட மோதல் ஒன்றிற்கு உதவிக்கென பயங்கர ஆயுதங்களுடன் சென்ற 10 இளைஞர்கள் நெல்லியடி பகுதி யில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். அவர்களுக்கெதிராக பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு விசாரணையின் முடிவில் தடை செய்யப்பட்ட பயங்கரமான ஆயுதங்கள் வைத்திருந்த கரவெட்டி இராஜ கிராமத்தைச் சேர்ந்த 10 இளைஞர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 3000 வீதம் மொத்தம் 30000 அபராதம் விதிக்கப்பட்டது. (101)

# சுகாதார மயமாக்கல் திட்டத்தின் கீழ் பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படும்

நாடளாவிய ரீதியில் சுகாதார வசதிகளற்ற சுமார் 600 பாடசாலைகளைத் தெரிவு செய்து அவற்றை 'சுகாதார மயமாக்கல்' எனும் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யவும் சுகாதார அடிப்படை வசதிகளை சிறந்த முறையில் ஏற்படுத்திக் கொடுக்கவும் அமைச்சு திட்டமிட்டிருப்பதாக கல்வி அமைச்சின் போஷாக்குத்திட்டப் பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரியொருவர் தெரிவித்தார்.

மேலும், அடிப்படை, சுகாதார வசதிக்களற்ற இப் பாடசாலைகளில் சுகாதார வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கத் தேவையான நிதி உதவிகளை உலக சுகாதார ஸ்தாபனம் வழங்க முன்வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி இத்திட்டத்தை முன்னோடித் திட்டமாகக்கொண்டு எல்லா மாகாணங்களுக்கும் விஸ்தரிக்கப்படுமெனவும் அந்த அதிகாரி தெரிவித்தார். சுமார் 6 ஆயிரத்து 27 பாடசாலைகளில் போஷாக்குணவுத்திட்டம் நடை முறைப்படுத்துவதனால் இப் பாடசாலைகளில் குறிப்பாகஅடிப்படை சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் கல்வியமைச்சு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (து-7)

# "வைகறை" மலர் வெளியீட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

தியாகி அறக்கொடைநிறுவனத்தின் 'வைகறை' மலர் வெளியீட்டு விழா எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இளைப்பாறிய அதிபரான செல்வி அ.கந்தையா தலைமையில் நடைபெறவுள் ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாநகரசபை ஆணையாளர் திரு.சீ.வீ.கே.சிவஞானம் கலந்து கொள்ளவுள்ளார். வெளியீட்டுரையை ஆசிரியர் ஆ.ஆறு திருமுருகனும், ஆய்வுரையை பேராசிரியர் சி.சிவலிங்கராசாவும் நிகழ்த்தவுள்ளனர். (து-7)

# இராசி பலன்

**14.07.2006**
**(ஆனி 30, வெள்ளிக்கிழமை)**
**சதுர்த்தி பின்னிரவு 1.07 மணிவரை**
**அவிட்டம் முற்பகல் 9.28 மணிவரை**
**இராகுகாலம் 10.30-12.00 மணிவரை**
**சுபநேரம் 6.00-7.30 மணிவரை**
**சங்கடகர சதுர்த்தி விரதம்**

| | |
|---|---|
| மேடம் | தெய்வதரிசனம், எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, குடும்ப மகிழ்ச்சி. |
| இடபம் | ஆரோக்கியம், முயற்சி கைகூடும், தூர தேசச் செய்தி, அதிகாரம். |
| மிதுனம் | புதிய திட்டமிடல், பிதாசிந்தை, பெரியோர ஆசி, பிரயாணம். |
| கடகம் | வாகனபயம், திருடர் தொல்லை, முயற்சி தாமதம், ஆரோக்கியக்குறைவு. |
| சிங்கம் | எடுத்த கருமங்கள் கைகூடும், குடும்ப சுகம், பொருள் சேர்க்கை, தெய்வசிந்தை. |
| கன்னி | மனமகிழ்ச்சி, முயற்சி கைகூடும், சுப நிகழ்வு, தெய்வசிந்தை. |
| துலாம் | வியாபாரநன்மை, புத்திரரால் வேலை, பணக்குறைவு, முயற்சி தாமதம். |
| விருச்சிகம் | தாய்வழி உறவு, காரியதாமதம், மனச் சஞ்சலம், பணவிரயம். |
| தனுசு | உறவினர் வருகை, முயற்சி பலிதம், தெய்வதரிசனம், அன்னியர் சந்திப்பு. |
| மகரம் | கடின வார்த்தை, பணவிரயம், குடும்பக் கவலை, வேலைச்சுமை. |
| கும்பம் | தெய்வசிந்தை, போசனசுகம், சொத்துக்களால் நன்மை, நல்ல முயற்சி. |
| மீனம் | உடல்நலக்குறைவு, திடீர் பயணம், காரிய தாமதம், பணவிரயம். |

- வளவன்






யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதி திருமதி சிறிநிதி நந்தசேகரத்தின் வாகனத்தைத் தாக்க இராணுவம் முயற்சித்ததற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக நேற்றையதினம் சட்டத்தரணிகள் முழு நாள் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டதோடு ஒரு மணி நேரம் நீதிமன்றத்துக்கு முன்பாக பகிஸ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (படங்கள்:- திலீவின்பன்)

# அம்புலன்ஸ் வண்டி கையளிப்பு

(மருதங்கேணி)


பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலைக்கு வேள்ட் விசன் நிறுவனத்தினால் புதிய அம்புலன்ஸ் வண்டி ஒன்று கையளிக்கப்பட்டது. இது யாழ்.சுகாதார பிரதி பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனால் வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது. (து-35)

# அன்பளிப்பு

(மருதங்கேணி)

மக்கள் வங்கியின் 45ஆவது ஆண்டு விழாவையொட்டி பருத்தித்துறை மக்கள் வங்கிக்கிளை பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலைக்கு 30 சுவர் மணிக்கூடுகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளதுடன் ஊழியர்களுக்கு அன்பளிப்பாக சிறிய குத்துவிளக்குகளையும் வழங்கியுள்ளது.

பருத்தித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் தலைமையிலான குழுவே இவ் அன்பளிப்புக்களை வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (து-35)



இம்மாதம் 30 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நல்லூர் கந்தசுவாமி கோவில் மகோற்சவத்தை முன்னிட்டு ஆலயப் புறச் சூழலில் உள்ள மண் மாநகரசபை ஊழியர்களாலும் ஆலய தொண்டர்களாலும் அரித்துச் சுத்தப்படுத்தப்பட்டு வருகிறது. (படம்:- திலீவின்பன்)

# வணிக முதல் தேர்வு 2002 - 2003 முடிவுகள்

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரி பதிவு, பரீட்சை அலகினால் வணிக முதல் தேர்வு (வெளிவாரி) 2002 – 2003 பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

இப்பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் வெளிவாரி அலகுடன் தொடர்புகொண்டு தமது பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும், 2004-2005 கல்வி ஆண்டுக்கான கலை மற்றும் வணிகத்தேர்வுக்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 14ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டுமெனவும் வெளிவாரி அலகு அறிவித்துள்ளது.

### சித்தியடைந்தோரின் பெயர் விபரம்

செல்வி பொன்னுசாமி தயாளினி, பொன்னப்பா சுதன், செல்வி இராஜேந்திரம் அகல்யா, செல்வி சுந்தரம் சுவர்ணா, செல்வி செல்லத்துரை சந்திரிகா, செல்வி சிவயோகன் ஜனனி, செல்வி ஜெகசோதிநாதன் ஜெயானந்த ரூபி, செல்வி வினாசித்தம்பி காயத்ரி, செல்வி செல்வராஜா ஹேமாலினி, செல்வி தர்மலிங்கம் கோமதி, செல்வி இரத்தினசிங்கம் மதிவதனி, செல்வி சிங்கராஜா மயூரதி, செல்வி சின்னத்தம்பி மேகலா, செல்வி சிவசுப்பிரமணியம் பரிமளா, செல்வி சுந்தரமூர்த்தி பரிமளா, செல்வி கோபாலசிங்கம் பத்மினி, செல்வராஜா பிரபாகரன், செல்வி பத்மநாதன் பிரகாசினி, செல்வி ஆறுமுகராசா பிரவிணா, செல்வி அழகையா பிரிமினி.

கந்தையாபிள்ளை ரமணன், செல்வி முருகன் ரதீனா, செல்வி சண்முகம் சாந்தகுமாரி, கதிரமலை சரவணபவன், ஞானசேகரம் செல்வகரன், செல்வி மகாலிங்கம் சிந்துஜா, குகதாசன் சிவதாசன், செல்வி சுந்தரலிங்கம் சுகிர்தா, செல்வி சின்னராஜா சுதர்சினி, செல்வி குமாரசாமி சுதர்சினி, செல்வி பரஞ்சோதி தாரகா, செல்வி பரமசிவம் தர்சினி, செல்வி விட்ணுசாமி தயாநிதி, செல்வி செல்வராஜா தேன்மொழி, செல்வி சிவசுப்பிரமணியசர்மா தேவமனோகரி, சண்முகநாதன் திருமாறன், செல்வி முத்துராசா துர்க்கா, செல்வி யுகன் துஷ்யந்தி, செல்வி பாலசுப்பிரமணியம் உதயபானு, செல்வி வேலுப்பிள்ளை வளர்மதி.

செல்வி ஜெயக்குமார் வனிதா, செல்வி வாமதேவன் வாசுகிதேவி, ஜெயரத்தினம் விகர்ணன், செல்வி செல்லத்துரை விஜயகௌரி, திருமதி உதயராணி விக்னேஸ்வரன், செல்வி லோகநாதன் வித்யா, நவரத்தினம் துஷ்யந்தன், செல்வி சுப்பிரமணியம் பிருந்தா, செல்வி எட்மண்ட் பீரிஸ் அபிராமி, தர்மகுலசிங்கம் பாரத்ரமணா, செல்வி துரைநாயகம் கோசலானி, செல்வி மயில்வாகனம் லதாநிதி, செல்வி சிரஞ்சீவி மோபெல் சாந்தமலர், செல்வி தேவதாசன் ஜெராட் மேரி நிரோசினி, செல்வி இராமலிங்கம் நிமாலினி, செல்வரத்தினம் பிரிந்தாபன், செல்வி தியாகன் சரிதா, நடராசமணியம் சிவகுமார், செல்வி சிவபாதசுந்தரம் சுகிர்தா, செல்வி சிவலிங்கம் சுகந்தா.

தயாபரன் சுதன், செல்வி இரத்தினசிங்கம் தாட்சாயிணி, செல்வி சிவபாதசுந்தரம் தர்சினி, செல்வி கணபதிப் பிள்ளை விரூபி, செல்வி அந்தோனி அங்கிளா, செல்வி சிவானந்தம் மதுராம்பிகை, செல்வி அருணாசலம் பத்மாஜினி, செல்வி தேவராஜா சிந்துஜா, செல்வி தனபாலசிங்கம் தர்ஜினி, செல்வி ரங்கநாதன் தர்மிகாசினி, செல்வி தங்கராஜா தர்மிளா, செல்வி இராசையா தவயோகம், இளையதம்பி விக்னேஸ்வரன், ஞானசுப்பிரமணியம் ஞானசம்பந்தன், செல்வி சுப்பிரமணியம் கோமதி, தர்மரெத்தினம் மணிவண்ணன், சிவகுரு மதனரூபன், செல்வி நவநீதராஜா தர்சினி, செல்வி ஸ்கந்தராஜா தாரிணி.

அருளம்பலம் டானியல் சுரேந்திரன், ஞானசம்பந்தன் செந்தமிழ்ச்செல்வன், செல்வி திருநாவுக்கரசு நாகநந்தினி, செல்வி சிறிஸ்கந்தராஜா மாதுலா, ஸ்ரனிஸ்லோஸ் அஞ்சலா, செல்வி தேவதாசன் மேரி அன்ரநெற், செல்வி தர்மகுலசிங்கம் பானுரேகா, செல்வி நடராஜா ஜெயந்தி, பாலசிங்கம் ஜெகானந்தன், செல்வி சிவலிங்கம் கிரிசாந்தி, செல்வி பாலசிங்கம் குமுதினி, செல்வி சின்னத்துரை ரஜிதா, செல்வி கற்பகநாதன் ராதிகா, செல்வி அரசரெத்தினம் ரேணுகா, செல்வி இராஜகோபால் சகிலா, செல்வி மரியதாஸ் சபீனா நைற்றிங்கேல், சண்முகலிங்கம் சபேஸ், செல்வி மாரிமுத்து சாரதா.

செல்வி முருகேசு ஷர்மிலா, கணேசமூர்த்தி சாயரூபன், செல்வி பொன்னையா சகுந்தலா, கணபதிப்பிள்ளை சிவகரன், செல்வி சண்முகலிங்கம் சிவரஞ்ஜினி, செல்வி பரமலிங்கம் சிவரஞ்ஜினி, செல்வி சுப்பிரமணியம் சுஜிதா, செல்வி சற்குணநாதன் உஷாநந்தினி, தர்மலிங்கம் லின்ரஸ், செல்வி கமலநாதன் மலர்விழி, வேலாயுதபிள்ளை பிரபாநந்தன், நல்லைநாதன் செந்தில்நாதன், செல்வி திருநாவுக்கரசு சுகுணமதி, தங்கராஜா ஜெபாசுதன், கணேசு கமலதாசன், செல்வி பொன்னம்பலம் இராஜஇராஜேஸ்வரி, தேவநந்தன் ஜெயநந்தன், இரகுபதி ஜெயகுமார், செல்வி சிவநாதன் நிருபா.

விஷ்மபுத்திரன் பிரகலாதன், திருச்செல்வம் செந்தூரன், செல்வி பூபாலசிங்கம் சர்மிளி, இராஜரெத்தினம் சிறிகணேசன், மகாலிங்கம் சுதன், செல்வி சிவராஜா தேவராணி, செல்வி குமாரசாமி விகிர்தினி, செல்வி கணபதிப்பிள்ளை அருந்தவமலர், செல்வி சாம்பசிவம் சத்யவாணி, விவேகானந்தன் தயாபரன், செல்லையா செல்வரதன், செல்வி ஞானசம்பந்தன் உமாதேவி, பாலசுப்பிரமணியம் ரஜனிகாந்தன். (து-133)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டமனாறு சந்நிதியான் ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை வெள்ளிக்கிழமை தோறும் நடாத்திவரும் ஆன்மீக நிகழ்வுத்தொடரில் இன்று 10.30 மணியளவில் யா/கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்வு இடம்பெறும். (த-35)

## கோப்பாய் மத்தியில் அதிகரிக்கும் திருட்டு

கடந்த சில நாட்களாகக் கோப்பாய் மத்திப் பகுதியிலுள்ள சில வீடுகளில் சிறு சிறு திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக இப்பகுதியிலுள்ள ஆலயங்களில் திருவிழாக்கள் நடைபெறுவதால் வீட்டார் அனைவரும் கோயிலுக்குச் செல்லும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி இத்தகைய நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இதனால் திருவிழாக்காலங்களில் கோயில்களுக்குச் செல்லவும் மக்கள் அச்சமடைந்து வருகின்றனர். முக்கிய திருவிழாக்கள் நடைபெறும் நாட்களில் மோட்டார் சைக்கிளில் வரும் திருடர்களின் நடமாட்டமும் தற்போது அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகின்றது. (த-79)

## பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை சங்கீத சபை நடாத்தும் 2006 ஆம் ஆண்டுக்கான அறிமுறைப் பரீட்சை நாளையும் நாளை மறுதினமும் அகில இலங்கை ரீதியாக நடைபெறவுள்ளது. (த-7)

## வருடாந்த உற்சவம்

(கோப்பாய்)

கோப்பாய் மத்தி முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 19ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறவுள்ளது.

27ஆம் திகதி வியாழக்கிழமை இரதோற்சவமும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-79)

# வவுனியா மாவட்ட நீதிபதி அவுஸ்திரேலியா பயணம்

(வவுனியா)

அவுஸ்திரேலியாவில் மெல்பன் பல்கலைக்கழகத்தில் ஒழுங்குசெய்யப்பட்டுள்ள சர்வதேச மனித உரிமைகள் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக வவுனியா மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் மெல்பன் மற்றும் சிட்னி நகரங்களுக்கான இரண்டு வார பயணமொன்றை மேற்கொண்டுள்ளார்.

இந்த சர்வதேச மாநாட்டில் மனித உரிமைகள் தொடர்பாக சட்டவாக்க சபைகளின் செயற்பாடுகள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான சட்டங்களை அமுல்படுத்தும் வழிவகைகள் என்பன பற்றி ஆராயப்படவுள்ளது.

அவுஸ்திரேலியா, அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், நியூஸிலாந்து, இந்தியா, இந்தோனேஷியா, கனடா போன்ற நாடுகளைச் சேர்ந்த மனித உரிமை துறை சார்ந்த பேராசிரியர்கள், ஆய்வாளர்கள் இந்த மாநாட்டின் பேச்சாளர்களாக அழைக்கப்பட்டுள்ளனர்.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சட்டங்கள் மற்றும் கொள்கைத் திட்டமிடல் சம்பந்தப்பட்ட அரச உயரதிகாரிகள், நீதிபதிகள், மனித உரிமை சட்டத்தரணிகள், மனித உரிமைவாதிகள், மனித உரிமை தொடர்பான தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்த பணியாளர்கள் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நாடுகளில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் நாடாளுமன்றங்களின் பங்களிப்பு தொடர்பான விழிப்புணர்வைக் கட்டியெழுப்புவதும் பாராளுமன்றங்களில் உருவாக்கப்படுகின்ற மனித உரிமைகள் தொடர்பான சட்டங்களை பயனுள்ள வகையில் நடைமுறைப்படுத்துவதற்குரிய வழிவகைகள் பற்றி ஆழமாக ஆராய்வதுமே இந்த மாநாட்டின் நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

# புத்திஜீவிகள் குழுவுக்கு பொதுமக்களும் ஆலோசனை வழங்கலாம் - ஹெகலிய ரம்புக்வெல

(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்வுக்கான அதிகாரப் பகிர்வு குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள புத்திஜீவிகள் குழு தனது ஆய்வறிக்கையை சமர்ப்பிப்பதற்கு ஜனாதிபதியினால் காலக்கெடு விதிக்கப்படவில்லை. அத்துடன் நிகழ்ச்சி நிரலும் தயாரிக்கப்படவில்லை. ஆனால் அந்த ஆய்வறிக்கை எவ்வளவு காலத்திற்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதை புத்திஜீவிகள் குழுவே தீர்மானிக்கும் என்று அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

ஆய்வறிக்கையை தயாரிப்பதற்காக காலக்கெடு விதித்து நிகழ்ச்சி நிரலை தயாரித்து அதனை ஒரு வரையறைக்குள் கொண்டு வருவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விரும்பவில்லை. ஆனால் அதற்கான நிகழ்ச்சி நிரலை புத்திஜீவிகள் குழு தயாரித்துக் கொள்ளும்.

இந்தக் குழுவிற்கு பொதுமக்களும் தகவல்கள், ஆலோசனைகள், கருத்துக்களை அனுப்பி வைக்கலாம். அவை யாவும் வரவேற்கப்பட்டு பரிசீலிக்கப்படும் என்றார். (கு)

# எண்ணெய் விலையைத் தீர்மானிக்கும் உரிமை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்திற்கு

உலக சந்தையின் விலைகளுக்கேற்ப எரிபொருளின் விலையை சுதந்திரமாக நிர்ணயிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்திய எண்ணெய் நிறுவனத்திற்கும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்திற்கும் தேவையான வகையில் எண்ணெயின் விலையை நிர்ணயிக்கும் உரிமையினை அரசாங்கம் வழங்கியுள்ளது.

பெற்றோல் மற்றும் டீசல் அடங்கிய கப்பல் ஒன்று அடுத்த வாரம் சீனத் துறைமுகத்தை சென்றடையவுள்ளது. அந்த எரிபொருளை இந்திய எண்ணெய் நிறுவனம் சந்தைக்கு விடுவதுடன் இந்தப் புதிய விலை நிர்ணயம் தொடங்கும் என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தற்போது இந்திய எண்ணெய் நிறுவனத்திடம் பெற்றோல் கையிருப்பில் இல்லை. இலங்கைக்குத் தேவையான முழுப் பெற்றோலையும் பெற்றோலியக் கூட்டுத்தாபனமே விநியோகித்து வருகிறது.

தற்போதைய விலையை விட அதிக விலையில் இந்திய நிறுவனம் எரிபொருளை விற்பனை செய்தால் அதனால் கூட்டுத் தாபனத்திற்கு எவ்வித பிரச்சினையும் இல்லை என்றும் கூட்டுத்தாபன அதிகாரிகள் தெரிவித்தனர்.

தற்போதைய விலையை விட குறைந்த விலையில் அவர்கள் எரிபொருளை விற்பனை செய்தால் கூட்டுத்தாபனத்தின் விற்பனையானது குறைவடைந்து கூட்டுத் தாபனம் மூடப்படக்கூடிய ஆபத்து இருப்பதாகவும் அவர்கள் கூறினர். (கு)

# கிருமிநாசினி பாவிப்பால் மாசடையும் சூழல்

(கோண்டாவில்)

விவசாய நடவடிக்கைகளில் குறுகிய காலத்தில் கூடிய விளைச்சலைப் பெறுவதற்காக விவசாயிகள் பீடை நாசினிகள், களை கொல்லிகள் முதலியவற்றை அதிகளவில் பயன்படுத்துவதனால் பல்வேறு சூழல், சுகாதாரப் பிரச்சினைகள் தோன்றுகின்றன.

பொதுவாக கிருமிநாசினிகள் விசிறப்பட்டு 10 தொடக்கம் 14 நாட்களுக்குப் பின்னரே நுகர்வு இடம்பெறுதல் வேண்டும். இக்கால இடைவெளியில் விசிறப்பட்ட கிருமிநாசினிகள் சூரிய ஒளியால் பிரிகையடைவதால் அதன் நஞ்சுத்தன்மை குறைந்து விடுகிறது.

விவசாயிகள் குறித்த கால இடைவெளியை கவனத்திலெடுக்காது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தும்போது விசிறப்பட்ட நஞ்சின் சிறு பகுதியாவது அவற்றில் தேங்கி விடுகின்றது.

இவ்வாறு நஞ்சூட்டப்பட்ட காய்கறிகளை உள்ளெடுக்கும்போது நஞ்சு உடலின் உள்ளுறுப்புக்களில் படிய ஆரம்பிக்கின்றது. பின்னர் குறித்த செறிவு மட்டத்தை அடைந்ததும் உட்களைப்பு, பலவீனம், தசைப்பிடிப்பு, பார்வைக் கோளாறு முதலியன ஏற்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பீடைநாசினிகள் தெளிக்கப்பட்ட விவசாய நிலங்களில் மேயும் கால்நடைகளும் பாதிப்படைகின்றன. அவற்றை இறைச்சிக்காகவும் பாலுக்காகவும் மனிதன் பயன்படுத்தும்போது கால்நடைகளிலிருந்து பிரிகையடையாத நஞ்சு மனிதனையும் வந்தடைகின்றது.

இவ்வாறு உடலினுள் நஞ்சு உட்செல்வதை தடுப்பதற்காக உணவுகளை பச்சையாக உண்பதை தவிர்த்தல், உரியமுறையில் நீரினால் பல தடவைகள் கழுவுதல், இயற்கை உரங்களைப் பயன்படுத்தி வீட்டுத்தோட்டம் அமைத்தல் போன்ற முறைகளைக் கையாளலாம் என அறிவுறுத்தப்படுகின்றது.

அதிகரித்த கிருமிநாசினிப் பாவனை காரணமாக நீர்நிலைகள் மாசுபடுவதனால் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படலாம் எனவும் கிருமிநாசினிகள் மழை வெள்ளத்தின் மூலம் கடலில் கலக்கும் போது கடல் வளமும் பாதிக்கப்படலாம் எனவும் சூழலியலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (து-36)

## இன்று ஒரு தகவல்

# எரிபொருள் தரும் தாவரங்கள்

எதையும் எரிப்பதற்கு நாம் தயாராகத்தான் இருக்கின்றோம். ஆனால் எரிபொருள் தான் சரியாகக் கிடைப்பதில்லை. பெற்றோல், மண்ணெண்ணெய் இதற்கெல்லாம் என்ன பாடுபடல் வேண்டியிருக்கின்றது. அங்கே, இங்கே பூமியைத் தோண்டிப்பார்த்து கிடைத்த வரைக்கும் எடுத்துக் கொண்டிருக்கின்றோம்! அதற்குச் செலவு அதிகமாகவுள்ளது. இன்னும் நூறு வருடத்திலே பூமியில் இருக்கும் எண்ணெய்யே இல்லாமல் போய்விடும் எனும் பயம். அதனாலே இதற்குப் பதிலாக வேறு என்ன செய்யலாம் என்று ஆராய்ச்சி தாராளமாக நடந்து கொண்டிருக்கின்றது.

அமெரிக்காவில் கலிபோர்னியா பல்கலைக்கழகத்திலே Melvin Kalvin என்ற பேராசிரியர் சுலபமாகக் கிடைகக் கூடிய ஏராளமான தாவரங்களில் இருந்து எரி எண்ணெய்களை எடுக்கலாம் என்று கண்டுபிடித்திருக்கின்றார். பிறேசில் அமேசன் பகுதியில் ஓர் அதிசய மரம் இருக்கின்றதாம். அந்த மரத்திற்கு பெயர் கோபை.'. பெரா மல்டிஜு"கா இறப்பர் மரத்திலிருந்து இறப்பர் பாலை எடுக்கின்றோம் அல்லவா? அதே மாதிரி இந்த மரத்திலிருந்து எண்ணெய் எடுக்கலாமாம்! அதனாலே இந்த வகை மரங்களை அதிக அளவில் வளர்ப்பதற்கு முயற்சி செய்கிறாாகளாம்.

நன்றாக வளர்ந்த ஒரு பெரிய மரத்திலே ஒரு ஓட்டை போட்டு விட்டால் எண்ணெய் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும். ஒரு நாளிலே 25 லீற்றர் வரைக்கும் எண்ணெய் கிடைக்குமாம். அதன்பின் ஒரு தக்கையாலே அந்த ஓட்டையை மூடி விடவேண்டியது தான். ஆறு மாதத்திற்குப் பிறகு மறுபடியும் எண்ணெய் கிடைக்குமாம்! இந்த எண்ணெயின் பெயர் கோபைபா (Copaiba) எண்ணெய். அதை அப்படியே டீசல் இயந்திரத்தினுள் விட்டு வாகனம் செலுத்தலாமாம். இதைக் காய்ச்சி வடித்தால் பல விதமாக உபயோகப்படுத்தலாம்.

பலிப்பைன்ஸில் 'பிட்டோஸ் போரம் ரெசின்.'.பெரம்' எனும மரம் இருக்கின்றதாம். அதிலிருந்தும் எண்ணெய் கிடைக்கின்றதாம். அதன் பழத்தில் கூட சிறிதளவு எண்ணெய் இருக்கிறது. அதை நீராவியிலே விட்டு காய்ச்சி வடித்து எடுக்கலாம. அதிலே ஐதரசனைச் செலுத்தி பக்குவப்படுத்தல் வேண்டும். அதன் பின் அதைப் பெற்றோலுக்குப் பதிலாக உபயோகிக்கலாம்! இது மாதிரி வேறு சில தாவரங்களிலிருந்தும் பாசியிலிருந்தும் எண்ணெய் எடுப்பதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றதாம்.!

இதையெல்லாம் எடுத்து உபயோகப்படுத்தினால் தான் நாம் காலத்தைக் கழிக்க முடியும். இல்லையென்றால் காரைத்தான் தள்ளிக்கொண்டிருக்கவேண்டும். எரிபொருளை சிக்கனமாகப் பயன்படுத்தினால் தான் இனிமேல் நாம் காலத்தைக் கழிக்கமுடியும்.

பிலிப்பைன்ஸில் விளக்கு மரம் ஒன்றைக் கண்டுபிடிததிருக்கின்றார்கள்! ஆமாம் மரங்களிலே அது ஒரு வகை. "Energy tree" என்று அதற்குப் பெயர் வைத்திருக்கிறார்கள். பிலிப்பைன்ஸில் ஏற்கனவே அந்த மரத்திற்கு 'Rumbang tree' என்ற பெயா. 50 வருடத்திற்குப் முன்னாலேயே இந்த மரத்தைப்பற்றி அவர்களுக்குத் தெரியுமாம். இருந்தாலும் அதன் உபயோகத்தை இப்போது தான் கண்டுபிடித்திருக்கிறார்கள். அப்படி என்ன உபயோகம்? அந்த மரத்தின் விதையைக் கொளுத்தினால் 15நிமிடம் நன்றாக எரியும். பக்கத்தில் பல கிராமங்களிலே ஊர் மக்கள் இதை நிறையப் பொறுக்கி வீட்டிலே வைத்திருப்பார்கள் எதற்கு?

இராத்திரியிலே விளக்குக்குப் பதிலாக இந்த விதையைக கொளுத்தி வைப்பதற்கு. வெளிச்சத்திற்காக வேறு வழியைத்தேடி அலையவேண்டியதில்லை. வெளிச்சம் என்பது வெளியே மட்டும் இருந்தால் போதுமா? உள்ளேயும் இருக்கவேண்டும். அப்படி இருந்தால்தான் வெளியே இருக்கும் வெளிச்சமும் பிரயோசனப்படும்.

ஒருவர் தெருவிலே எதையோ தேடிக்கொண்டு இருந்தார். வழியிலே போனவரும் அவருக்காகப் பரிதாபப்பட்டு தேடிப்பார்த்தார். ஒன்றும் கிடைக்கவில்லை. அதிக நேரம் தேடியும் பிரயோசனம் இல்லாமல் கடைசியாக வழிப்போக்கா 'எதைத் தொலைத்தீகள்?' என்று கேட்டார். என்னுடைய மோதிரத்தை ! என்றார் இவர். எந்த இடத்திலே தொலைத்தீர்கள் என்றார். அதற்கு இவர் அதோ இருக்கின்றதே என் வீடு அந்த வீட்டுக்கு உள்ளே தான் தொலைததேன் என்றார். என்ன இது! வீட்டுக்குள் தொலைத்துவிட்டு இப்படி வீதியில் வந்து தேடிக்கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டார் அதற்கு நான் என்ன செய்வது? வீட்டிற்குள்ளே வெளிச்சம் இல்லை. இங்கே தான் வெளிசசம் இருக்கின்றது! வெளிச்சமுள்ள இடத்திலே தேடினால தான் கிடைக்கும் என்றார் இவர். இவ் வெளிச்சம் வீட்டிற்கு உள்ளே மட்டும்தானா? இல்லை!

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# கண்காணிப்புக்குழுவின் நடவடிக்கைகளை விஸ்தரிக்கும் நோக்கம் தற்போது இல்லை

## க.கா.குழுவின் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிற்கு புதியவர்களை இணைத்துக்கொள்வோ அல்லது அதன் நடவடிக்கைகளை விஸ்தரிக்கவோ எதுவிதமான தீர்மாணங்களையும் தாம் எடுக்கவில்லையென கண்காணிப்புக் குழு தெரிவிக்கின்றது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளைச் சேர்ந்த கண்காணிப்பாளர்களை வெளியேற்ற விடுதலைப்புலிகள் செப்டெம்பர் முதலாம் திகதிவரை காலக்கெடு விதித்துள்ள நிலையில், இது குறித்த ஒரு திட்டவட்டமான முடிவு எடுக்கும்வரையில் கண்காணிப்புக் குழு விஸ்தரிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை என குழுவின் பேச்சாளர் தோஃபினூர் ஒமர்ஸன் கொழும்பில் இருந்து வெளிவரும் தமிழ் நாள் இதழ் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

கடல் கண்காணிப்பை தற்காலிகமாக நிறுத்தியுள்ள நிலையிலும் புலிகளின் நிபந்தனைக்கு திட்டவட்டமான முடிவு இன்னும் அறிவிக்கப்படாத நிலையிலும் விஸ்தரிப்பு நடவடிக்கைகளுக்கும் புதிய படகுகள் கொள் வனவிற்கும் எவ்வாறு நாம் திடமான செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பாளர்கள் பிரச்சினை குறித்து தொடர்ச்சியான கூட்டங்களையும் கலந்தாலோசனைகளையும் நோர்டிக் நாடுகள் தொடர்ந்தும் மேற்கொண்டே வருகின்றன.

புலிகளுடனும் அரசுடனும் உத்தியோகப் பற்றற்ற வகையில் பலமுறை இது தொடர்பாக பல மட்டங்களிலும் தொடர்புகள் மேற்கொள்ளப்பட்டு ஒரு முடிவை எடுக்க நோர்வே உட்பட்ட நோர்டிக் நாடுகள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பாளர்கள் வெளியேற்றம் குறித்து ஒரு உறுதியான உத்தியோக பூர்வ முடிவு வெளியான பின்னரே கண்காணிப்புக்குழு விஸ்தரிப்பு மற்றும் மாற்றங்கள் குறித்தும் முடிவுகள் அறிவிக்கப்படும் என்று சுட்டிக்காட்டினார். (த)

# அரசாங்கத்தின் அக்கறையின்மையால் தொழிலின்றி வாடும் மன்னார் மீனவர்கள்

(மன்னார்)

மன்னார் பகுதியில் நீண்ட நாட்களாக அமுலில் இருக்கும் மீன்பிடித் தடையினாலும் மட்டுப்படுத்தப்பட்ட மீன்பிடியினாலும் பசி பட்டினிச் சாவை எதிர்நோக்கியிருக்கும் மீனவ சமூகத்துக்கு இதுவரை அரசிடமிருந்து



தகுந்த பதில் கிடைக்கவில்லை. ஆகவே மீன்பிடி சமூகம் எடுக்கும் முடிவுக்கு பாராளுமன்ற உறுப்பினர்களான நாம் பூரண ஒத்துழைப்பு வழங்குவோமென வன்னி மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினர் எஸ். வினோநேகராதலிங்கம் கூறினார்.

கடந்த செவ்வாயன்று மன்னார் மாவட்ட மீனவ சமூகப் பிரதிநிதிகள் அவசரமாகக் கூடிய கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று கடல் மிக அமைதியாக இருக்கின்றது. காரணம் மீனவர்கள் தொழிலுக்குச் செல்வதில்லை. இதனால் கடற்படையினரும் செல்வது மிகக் குறைவாக உள்ளது. கடலில் மோதல் குறைந்துள்ளதுபோல் தெரிகின்றது.

கடலில் மோதலை குறைப்பதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் பசி பட்டினியால் சாகவேண்டுமா? ஆகவே மீனவ சமூகம் எடுக்கின்ற முடிவுக்கு பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் பூரண ஒத்துழைப்பு தர இருக்கின்றோம் என்றார். மீனவ சமூகப் பிரதிநிதிகள் கருத்து தெரிவிக்கும்போது, கடந்த 17.06.2006 அன்று கடலில் நடந்த சம்பவத்தின்பின் ஒரு சில தினங்களுக்கு மீன்பிடித்தடையை தற்காலிகமாக அமுல் செய்வதாக தெரிவித்தனர்.

ஆனால் இன்று 24 நாட்கள் கடந்து விட்டன. அரசு எந்தவொரு முடிவையும் கூறாது மௌனம் காக்கின்றது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மகஜர்கள் கொடுக்கப்பட்டும் நேரடியாக பார்வையிட்டும் எவ்வித முடிவும் இன்றி தொழில் செய்ய இன்னும் அனுமதி வழங்கப்படாமல் இருப்பது கவலையைத் தருகின்றது. அரசின் இந்த பொறுப்பற்ற போக்கால் எமது குழந்தைகளும் நாங்களும் பசி பட்டினியை எதிர்நோக்கி இருக்கின்றோம்.

ஆகவே ஒன்று இந்தியாவுக்கு செல்லவேண்டும் அல்லது மடுஆலயம் நோக்கி செல்ல வேண்டிய நிலையில் நாம் இன்று இருக்கின்றோம் என்றனர்.

எதிர்வரும் 16ஆம் திகதி வரை மன்னார் அரசு அதிபரிடம் ஒரு அவகாசம் தெரிவிப்பதுடன் இதற்குள் நல்ல தொரு முடிவு கிடைக்காவிடில் 17ஆம் திகதி திங்கட்கிழமை முதல் மன்னார் மாவட்டத்தில் சகல இயல்பு நிலைகளையும் ஸ்தம்பித நிலைக்குக் கொண்டு வருவதென இங்கு தீர்மானிக்கப்பட்டது.

மன்னார் அரச அதிபரை சந்தித்து இதை தெளிவு படுத்த ஒரு குழுவும் நியமிக்கப்பட்டது. (த)

# மக்களைக் காப்பாற்றும் நோக்கிலேயே பதில் தாக்குதல் நடத்தவில்லை அரசு

## அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே

(கொழும்பு)

புலிகள் எம்மைத் தாக்கும் போது நாங்கள் ஏன் பதில் தாக்குதல் நடத்துவதில்லையென்று சிலர் கேட்கின்றனர். அவ்வாறு நாங்கள் தாக்கினால் அப்பாவிப் பொது மக்கள் அநியாயமாக உயிரிழக்க நேரிடும். இதற்காகவே பதில் தாக்குதல் நடத்தாமல் இருக்கின்றோம் என்று வர்த்தக வாணிப அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளே கூறினார்.

மஹிந்த சிந்தனையில் மகநகும திட்டத்தில் தெனியாயவிலிருந்து கொழும்புக்கு நிறுவப்படும் அதிவேகப் பாதையில் நெலுவை வரையிலான முதலாம் கட்ட நவீன பாதையின் வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். தென் மாகாண சபையின் உபதலைவர் விஜயதஹநாயக்க தலைமையில் இடம்பெற்ற இந்த வைபவத்தில் அமைச்சர் பெர்னாண்டோ புள்ளே மேலும் கூறுகையில்,

புலிகள் தொடர்ந்தும் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். எம்பொறுமையை அவர்கள் அளவு கடந்து சோதிக்கின்றனர். வலியவந்து சண்டைக்கு எம்மை இழுக்கிறார்கள். ஆனால் நாங்கள் தொடர்ந்து பொறுமையைக் கடைப்பிடிக்கின்றோம். நாங்கள் பொறுப்பு மிக்க அரசாங்கத்தை ஏற்றுள்ளவர்கள். நாங்கள் மனம் வைத்தால் இரண்டு மூன்று தினங்களில் புலிகளின் அட்டகாசத்தை ஒழித்து விடமுடியும். அந்த நிலைக்கு எம்மைத் தள்ளிவிட வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

எரிபொருள் விலை அதிகரிப்பினாலும் யுத்த மேகங்கள் சூழ்வதாலும் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி தடைப்படுகின்றன. இவைகளை மையமாக வைத்துக் கொண்டு சில தீய சக்திகள் யுத்தத்தைத் தூண்டிவிடுவதற்கான சந்தர்ப்பங்களை எதிர்பார்த்து நிற்பதுடன் அதற்கான சதி வேலைகளிலும் ஈடுபடுவதை நாம் அறிவோம். உலக சந்தையில் எரிபொருள் விலை கூடும் போது சகல பொருட்களின் விலைகளும் அதிகரித்து விடுகின்றன. இதை எந்த அரசு ஆட்சியிலிருந்தாலும் தடுக்க முடியாது.

இன்னும் இரண்டு வருட காலங்களில் காலி தெனியாய அதிவேகப் பாதையின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுவிடும். அதற்காக 1200 மில்லியன் ரூபாவை அரசு ஒதுக்கியுள்ளது. கொழும்பு - மாத்தறை, மாத்தறை– அம்பாந்தோட்டை, அம்பாந்தோட்டை– வீரவில் அதிகேவப்பாதை 10 வருட காலத்தில் திட்டமிட்டபடி பூர்த்தி செய்யப்படும் என்றார். (த)


# பாடசாலை மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டை

(துன்னாலை)

வடமராட்சி கல்வி வலயத்தில் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் பாடசாலை மாணவர்கள் தங்கள் பாடசாலைகள் மூலமாக விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறும் அத்துடன் 17 வயது ஆரம்பிக்கும் போது தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்கமுடியும் எனவும் தாங்கள் கல்வி கற்கும் பாடசாலைகள் மூலம் விண்ணப்பிப்பதன் மூலம் இலகுவாகவும் விரைவாகவும் அடையாள அட்டையை பெற்றுக்கொள்ள முடியுமென்றும் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக பல மாணவர்கள் கரவெட்டி, பருத்தித்துறை பிரதேச செயலகங்களுக்கு அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள செல்வதால் தமது வேலைப்பளு அதிகரித்துள்ளதாக பிரதேச செயலர்கள் கல்விப் பணிமனைக்கு தெரியப்படுத்தியதையடுத்தே மேற்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (அ-101)

# புத்தகம் எழுதுகிறார் சௌரவ் கங்குலி



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலி இந்திய அணியில் மீண்டும் இடம்பிடிப்பதோடு கிரிக்கெட் அனுபவங்களை புத்தகமாக வெளியிட இருப்பதாகவும் கூறினார்.

இதுகுறித்து அவர் பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில்,

விளையாடும் போட்டிகளில் அதிக ஓட்டங்கள் குவிக்க வேண்டும் என்பதே எனது இப்போதைய குறிக்கோள். நன்றாக ஓட்டங்கள் குவித்து இந்திய அணியில் மீண்டும் இடம் பிடிப்பேன் என நம்புகிறேன்.

அணித் தலைவர் பதவி வேண்டும் என நினைக்கவில்லை. அடிக்கடி அணித்தலைவரை மாற்றுவது அணிக்கு நல்லதல்ல. சாதாரண வீரராக அணியில் இடம்பிடிக்கவே விரும்புகிறேன். இப்போதைக்கு ஓய்வு பற்றி நினைக்கவில்லை.

இதுவரை 390 சர்வதேச ஒருநாள் போட்டிகளில் இந்திய அணிக்காக விளையாடி இருக்கிறேன். அவற்றில் 200 போட்டிகளில் அணித்தலைவராக இருந்துள்ளேன். அந்தவகையில் நான் அதிர்ஷ்டசாலிதான். மீண்டும் அணியில் இடம் பிடிக்க முடியாவிட்டால் அதற்காக கவலைப்படமாட்டேன். எனது கிரிக்கெட் அனுபவங்களை புத்தகமாக எழுதுவதற்கு திட்டம் இருக்கிறது எனத் தெரிவித்தார் கங்குலி. (த-5)

# இலங்கை அணிக்கு எதிரான டெஸ்டில் தென்னாபிரிக்க அணிக்கு பிரின்ஸ் தலைவர்

(டர்பன்)

தென்னாபிரிக்க அணியின் புதிய அணித் தலைவராக ஆஷ்வல் பிரின்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார். இதன்மூலம் அந்த அணிக்கு தலைவராக முதல் கறுப்பர் என்ற பெருமை பெற்றுள்ளார்.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி இம்மாத இறுதியில் இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு இரண்டு டெஸ்ட் மற்றும் இந்தியா, இலங்கை அணிகள் பங்குபெறும் முத்தரப்பு தொடரில் பங்கேற்கவுள்ளது.

இதுவரை அணித்தலைவராக செயல்பட்டு வந்த ஸிமித் இத்தொடரில் காயம் காரணமாக இடம்பெறவில்லை. மேலும் கலிஸ் இல்லாததால் ஆஷ்வல் பிரின்ஸ் அணித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இதுபற்றி அவர் கூறுகையில்,

அணியில் திறமை வாய்ந்த இளம் வீரர்கள் பலர் உள்ளனர். அவர்கள் எனக்கு நிச்சயம் ஒத்துழைப்பு வழங்குவர். அணிக்கு தலைவராக நியமிக்கப்பட்டிருப்பது பெருமையாக உள்ளது என்றார்.

அணி விபரம் வருமாறு, பிரின்ஸ் (அணித்தலைவர்), அம்லா, போயே, பவுச்சர் டி வில்லியர்ஸ், டிப்பனர், கிப்ஸ் ஹோல், நெல், நிட்னி, பொலக், ஸ்டைன் மற்றும் தஷாபலாலா.

போட்டி அட்டவணை:-

ஜுலை 22-24 ஆம் திகதி வரை ரிபிசி அணியுடன் மூன்று நாள் பயிற்சி ஆட்டம்.

*முதலாவது டெஸ்ட்*

ஜுலை- 27-31 ஆம் திகதி வரை கொழும்பில்.

*இரண்டாவது டெஸ்ட்*

ஆகஸ்ட் - 4-8 ஆம் திகதி வரை கொழும்பில்.

*முக்கோணத்தொடர்*

இலங்கை, தென்னாபிரிக்க மற்றும் இந்தியா. ஆகஸ்ட் 14-29 ஆம் திகதி வரை. (த-5)

**விளையாட்டுச் செய்திகள்**

# சிறந்த வீரர் விருதை ஜிடேன் இழக்க நேரிடும் என்கிறார் பிபா தலைவர்

உலக கோப்பை உதைபந்தாட்ட போட்டியில் பெற்ற சிறந்த வீரருக்கான விருதை பிரான்ஸ் அணியின் தலைவர் ஜினெடின் ஜிடேன் இழக்கக்கூடும் என சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் (பிபா) தலைவர் செப் பிளாட்டர் தெரிவித்துள்ளார்.

உலகக் கோப்பை உதைபந்தாட்டப் போட்டி ஜேர்மனியில் ஞாயிற்றுக்கிழமை முடிவுற்றது. அதில் சிறந்த வீரராக ஜிடேன் தேர்வு செய்யப்பட்டார். இத்தகவல் திங்கட்கிழமை வெளியிடப்பட்டது.

அதேநேரம் இறுதி ஆட்டத்தின்போது நிகழ்ந்த மோதல் உலகப் பார்வையைப் பெற்றது. ஆட்டத்தின் கூடுதல் நேரத்தில் இத்தாலி வீரர் மார்கோ மற்ரஸியை தலையால் முட்டி கீழே வீழ்த்தியதால் சிவப்பு அட்டைக்குள்ளாகி வெளியேறினார் ஜிடேன். பெனால்டி ஷூட் அவுட்டில் 5-3 என்ற கோல் கணக்கில் இத்தாலி வெற்றி பெற்று கோப்பையைக் கைப்பற்றியது.

இதற்கிடையே ஜிடேன் வெளியேற்றப்பட்ட விவகாரம் குறித்து ஆய்வுசெய்ய ஒழுங்கு நடவடிக்கை குழுவுக்கு உத்தரவிட்டது சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம்.

இதற்கிடையே எதிரணி வீரர் (மற்ரஸி) அவமரியாதையாக நடந்துகொண்டதால் தான் அவரை முட்டித் தள்ளினேன் என ஜிடேன் தெரிவித்துள்ளார். உண்மை நிலையைப் பிரான்ஸ் தொலைக்காட்சியில் எதிர்வரும் புதன்கிழமை நேரடி ஒளிபரப்பில் அவர் தெரிவிக்கவுள்ளார்.

இந்நிலையில் சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் செப் பிளாட்டர் ஜிடேன் அவ்விருதை இழக்கக்கூடும் எனத் தெரிவித்துள்ளார்.

ஜிடேனுக்கான விருதைத் திரும்பப் பெறுவதற்கு முன்பு சர்வதேச சம்மேளனத்தின் ஒழுங்கு நடவடிக்கை குழு நடத்திய ஆய்வு அறிக்கை பரிசீலிக்கப்படும். சிறந்த வீரர் விருதுக்குரியவர் யார் என்பதை பிபா தேர்வு செய்யவில்லை. சர்வதேச பத்திரிகையாளர் குழுவே அதை முடிவு செய்தது.

உதைபந்தாட்ட விதிமுறைக்கு எதிராக ஒரு பிரச்சினை எழும்போது அதில் தலையிட பிபா செயற்குழுவுக்கு அதிகாரம் உள்ளது. அதனாலேயே ஜிடேன் விவகாரம் குறித்து ஆய்வு செய்து அறிக்கை தர ஒழுங்கு நடவடிக்கை குழுவிடம் கேட்டுக்கொண்டோம் என்றார் பிளாட்டர். (த-5)

## ஜேர்மனி பயிற்சியாளர்

# கிளின்ஸ்மேன் திடீர் விலகல்

(பெர்லின்)

ஜேர்மனி உதைபந்தாட்ட அணியின் பயிற்சியாளர் ஜர்கன் கிளின்ஸ்மேன் பதவி விலகினார்.

ஜேர்மனியில் நடந்த 18ஆவது உலகக் கோப்பை உதைபந்தாட்ட போட்டியில் ஜேர்மனி அணி 3ஆவது இடத்தைப் பிடித்தது. கோப்பையை நழுவ விட்டாலும், ஜேர்மனி அணி வெண்கலப் பதக்கம் வென்றதை அந்நாட்டு ரசிகர்கள் கொண்டாடி வருகின்றனர்.

அந்த அணி 3ஆவது இடத்தைப் பிடித்ததே கிளின்ஸ் மேனுக்கு மிகப்பெரிய வெற்றிதான். ஜேர்மனி அணி இந்த அளவுக்கு முன்னேறும் என்பதை உதைபந்தாட்ட நிபுணர்களே எதிர்பார்க்கவில்லை.

தங்களது துடிப்பான ஆட்டத்தால் அனைவரையும் கவர்ந்த ஜேர்மனி அணிக்கு, பயிற்சியாளர் கிளின்ஸ்மேனின் வியூகங்கள் பெரிதும் உதவின. கடந்த 2 ஆண்டுகளுக்கு முன் பொறுப்பேற்ற அவர், உலகக் கோப்பைக்கு பிறகும் பதவியில் நீடிக்க வேண்டும் என்று வீரர்களும் ரசிகர்களும் விரும்பினர்.

ஜேர்மனியில் இதுகுறித்து நடந்த கருத்துக் கணிப்பில் உலகக் கோப்பையில் விளையாடிய 23 வீரர்களும் 93 சதவீத பொதுமக்களும் கிளின்ஸ்மேன் பயிற்சியாளராக நீடிக்க வேண்டும் என்று வாக்களித்து இருந்தனர்.

இந்நிலையில் பயிற்சியாளர் பொறுப்பில் இருந்து விலகுவதாக கிளின்ஸ்மேன் அறிவித்துள்ளார்.

உலகக் கோப்பையில் அவரது உதவியாளராக இருந்த லோசிம் லூவ் புதிய பயிற்சியாளராக நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

தெற்கு கலிபோர்னியாவில் வசிக்கும் கிளின்ஸ்மேன் அமெரிக்க அணியின் பயிற்சியாளராக இருப்பதற்கு மிகப்பெரிய தொகை பேசப்பட்டு இருப்பதாக தகவல் வெளியானது. இதை அவர் மறுத்துள்ளார். (த-5)

# இந்திய அணியில் விரைவில் சச்சின்

## ஆன்ட்ரூ லீபஸ் நம்பிக்கை

இந்திய கிரிக்கெட் அணியில் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் விரைவில் இடம்பெறுவார் என்று முன்னாள் உடற்பயிற்சி நிபுணர் ஆன்ட்ரூ லிபஸ் கூறினார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது,

தோள்பட்டை அறுவை சிகிச்சைக்குப் பிறகு இங்கிலாந்தில் உள்ள லேஷிங்ஸ் கிளப் அணிக்காக சச்சின் விளையாடினார். நான்கு சதங்கள் ஒரு இன்னிங்சில் 98 ரன் என அபாரமாக ஓட்டங்கள் குவித்தார். பாகிஸ்தான் பூகம்ப நலநிதி திரட்டுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போட்டியில் உலக லெவன் அணியில் இடம்பெற்ற சச்சின் அதிரடியாக அரைச்சதம் விளாசினார்.



இந்த ஆட்டங்களைப் பார்க்கும் போது அவர் விரைவில் இந்திய அணிக்குத் திரும்புவார் என எதிர்பார்க்கிறேன்.

நீண்டநேரம் களத்தில் நின்று பந்துகளை எவ்வித சிரமமும் இன்றி சந்திக்கிறார். பழைய வேகத்துடன் சிக்சர்களை விளாசுவது மகிழ்ச்சியாக உள்ளது. (த-5)

# ஐ.ஸி.ஸி. டெஸ்ட் தரவரிசையில் பாக். அணி 2ஆவது இடத்துக்கு முன்னேற்றம்

டெஸ்ட் தரவரிசையில் 3ஆவது இடத்தில் இருந்து பாகிஸ்தான் அணி 2ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் அடிப்படையில் அணிகள் மற்றும் வீரர்களின் தர வரிசைப்பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது. இதில் இந்திய அணி 4ஆவது இடத்தில் உள்ளது. இந்திய அணி மொத்தம் 111 புள்ளிகளை பெற்றுள்ளது. 109 புள்ளிகளுடன் 3ஆவது இடத்தில் இருந்த பாகிஸ்தான் அணி தற்போது 120 புள்ளிகளுடன் 2ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. 2ஆவது இடத்தில் இருந்து இங்கிலாந்து அணி (113 புள்ளிகள்) 3ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது.

130 புள்ளிகளுடன் அவுஸ்திரேலிய அணி தொடர்ந்து முதல் இடத்தில் உள்ளது. இலங்கை (99 புள்ளிகள்), தென்னாபிரிக்கா (98), நியூசிலாந்து (92), மேற்கிந்திய தீவுகள் (72), ஸிம்பாவே (28), பங்களாதேஷ் (2) ஆகிய அணிகள் 5 முதல் 10 இடங்களைப் பிடித்துள்ளன.

இதில் துடுப்பாட்ட தர வரிசையில் இந்திய அணித்தலைவர் டிராவிட் (882) 2வது இடத்தில் உள்ளார். அவுஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கி பொன்டிங் 931 புள்ளிகளுடன் முதல் இடத்தை தக்கவைத்துள்ளார். கலிஸ் (தென்னாபிரிக்கா), இன்ஸமாம் (பாகிஸ்தான்), ஹைடன் (அவுஸ்திரேலியா), யூனுஸ்கான் (பாகிஸ்தான்), முகமது யூசுப் (பாகிஸ்தான்), மைக்ஷிசே (அவுஸ்திரேலியா), பீட்டர்சன் (இங்கிலாந்து), லாரா (மேற்கிந்திய தீவுகள்) ஆகியோர் முறையே 3 முதல் 10 இடங்களைப் பிடித்துள்ளனர்.


பந்துவீச்சில் இலங்கை அணி சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளீதரன் 901 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளார். (த-5)

# ஜினடின் ஜிடேன் சிலைக்கு மவுசு

பிரான்ஸ் உதைபந்தாட்ட அணியின் தலைவர் ஜினடின் ஜிடேனின் மார்பளவு சிலை விற்பனையாகி வருகிறது. பிரான்ஸ் நாட்டின் பிரபல சிற்பி ஜீன் பெப்டிஸ்டே செக்லர் வடிவமைத்துள்ள இந்தச் சிலை, வெள்ளி மற்றும் வெண்கல உலோகங்களின் கலவையில் உருவாக்கப்பட்டுள்ளது.

இருபது செ.மீ உயரம், 2.8 கிலோ எடை கொண்ட இந்தச் சிலையின் பீடத்தில் ஜிடேன் கையெழுத்து பொறிக்கப்பட்டுள்ளது. கையெழுத்தின் கடைசி புள்ளியில் 0.03 கரட் வைரம் பதிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 100 சிலைகள் மட்டுமே செய்யப்பட்டுள்ளன.

மொனாக்கோ நாட்டைச் சேர்ந்த எம் எம்ஜி எண்டர் டெயின் மென்ட் நிறுவனம் ஜிடேன் சிலையை விற்பனைக்கு ஏற்பாடு செய்துள்ளது. இந்தச் சிலையின் விலை இலங்கை மதிப்பில் ரூ.4 இலட்சத்து 25 ஆயிரம். அத்தனை சிலைகளும் முன்கூட்டியே விற்றுத் தீர்ந்து விட்டது குறிப்பிடத்தக்கது.



உலக கோப்பை உதைபந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் சிவப்பு அட்டை பெற்று வெளியேறிய பிறகும் பிரான்ஸ் நாட்டில் ஜிடேனின் புகழ் சற்றும் குறையவில்லை. (த-5)

# சுவாமி விவேகானந்தர்

## கருணையின் சரிதம்

அவதார வரிஷ்டரான ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்சர் தாம் அவதார புருஷர் என்பதையும் அம்பிகையின் மூலமே அறிந்தார். பிறமத மோகத்தாலும் எம் மதத்திலும் பற்றற்ற அவநம்பிக்கை



யாலும் சீர்கேடுற்று வரும் பாரதத்தில் மீண்டும் சனாதன தர்மத்தைத் தழைக்கச் செய்யப் பிறந்தவர் தாம் என்பதை உணர்ந்தார். தம் மூலம் தேவி புதிய தொரு ஆன்மிக ஸ்தாபனத்தை நிறுவப் போகிறாள்; உலகுக்கெல்லாம் பொதுவாக எந்நாட்டவரும் பின்பற்றும் ஸ்தாபனதமாக அது விளங்கப்போகிறது என்பதையும் உணர்ந்தார்.

புதியதோர் ஆன்மிகப் பண்ணைக்கு தனிப்பெரும் உரிமையாளராகிய பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் கண்ட முக்கியமான முடிவுகள் இவைதாம்;

ஒவ்வொரு மதமுமே ஆண்டவனிடம் இட்டுச்செல்லும் ஒரு பாதையாகும். இந்த மதத்திலேயே மூன்றாகக் காணும் துவைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் இவை ஒன்றுக்கொண்டு முரணாவையல்ல. ஒன்றை மற்றது பூரணமாக்கும் முறையில் அமைந்தவை அவை.

உபநிஷதங்களின் உருவகமாகவே வாழ்ந்தவர் ஸ்ரீ ராமகிருஷ்ண தேவர். உபநிஷதங்கள் கண்ட உண்மைகளைத்தான் மிகவும் எளிதான முறையில் அவர் விளக்கினார். அந்த உண்மைகளை உலகெல்லாம் அறியவே தாம் அவதரித்திருப்பதை உணர்ந்திருந்தார் அவர். அவரிடம் சிஷ்யர்கள் வந்து சேரப் போகிறார்கள்; அவர் சேர்த்து வைத்திருந்த ஆன்மிகச்செல்வத்தை அவர்கள்பாரெங்கும் விநியோகிக்கப் போகிறார்கள் என்று பவதாரிணி கூறியிருந்தாள்.

அவர்களை நாள்தோறும் எதிர்பார்த்தே ஏங்கி வந்தார் பரமஹம்சர். முட்ட முட்டப்பால் சுரந்து மடிகனக்கும் பசு அந்தப் பாலைப் பருகவேண்டிய கன்றை எதிர் நோக்கி வாடுவது போல ஞானமுதம் நிரம்பப் பெற்ற ஸ்ரீராமகிருஷ்ண முனிவர் அந்த அமுதத்தை அருந்த வேண்டிய அருமை வாரிசுகளுக்காகக் காத்திருந்தார். இந்த ஆர்வத்தை பற்றிய பரமஹம்சர் சொல்வார். 'அப்போது நான் கொண்டிருந்த ஆர்வத்துக்கு ஓர் எல்லையே கிடையாது. பகல் நேரத்தில் அந்த ஆர்வத்தை நான் எவ்வாறோ கட்டுப்படுத் திக்கொண்டேன். லௌகிக இச்சை மட்டுமே கொண்ட மக்களின் பேச்சு எனக்கு கசப்பாகக் கசந்தது.

என் அன்புக் குழந்தைகள் வரும் நாள் எந்நாளோ என்பதையே ஆர்வமிக எண்ணிப்பார்த்துக் கொண்டிருப்பேன். அவர்களோடு உரையாடியும். என் அனுபவங்களை யெல்லாம் அவர்களுக்கு விளக்கி என் மனச்சுமையை இறக்கிகொண்டும் தான் சாந்தி அடையப் போகிறேன் என்று நம்பி வந்தேன் ஒவ்வொரு சிறிய சம்பவமும் எனக்கு அவர்களை நினைவூட்டும். அவர்களில் இன்னின்னாருக்கு இன்னின்ன சொல்ல வேண்டும் என்றெல்லாம் நானே வரையறைகள் செய்து பார்த்துக் கொள்வேன். பகல் நேரம் முடியும். அதன்பின் என் உணர்ச்சிகளை என்னால் கட்டுப்படுத்தவே முடியாது.' இன்னொரு பகல் பேச்சு! அவர்கள் வந்தபாடில்லை! சந்தியா பூஜையின் போது கோவில் சூழலில் மணிநாதமும், சங்கநாதமும் நிரம்பும்போது தோட்டத்திலுள்ள கட்டடத்தின் கூரைக்கு ஏறிச் செல்வேன் நான். இதய வேதனை என்னை முறுக்கிப் பிழிய என் குரலின் உச்சியில் கதறுவேன்; வாருங்கள் என் குழந்தைகாள்! எல்லாரும் எங்கு போனீர்கள்? நீங்களின்றி என்னால் உயிர் தரிக்க முடியவில்லை என்று தாய் தனது குழந்தைக்காக அப்படி ஏங்குவதில்லை: நண்பனொருவன் தன்னுடைய நண்பனுக்காக அப்படி ஏங்குவ

## அத்தியாயம் - 12

தில்லை: காதலன் தன் காதலிக்காக அப்படி ஏங்குவதில்லை- அப்படி ஏங்கியிருக்கிறேன் நான். ஆஹா அதை வார்த்தைகளில் கூறவே முடியாது.

பரமஹம்சரான ஒரு சன்னியாசிக்கு இவ்வளவு துயரம் ஏற்படலாமா என்றால் அதுதான் கருணை செய்கிற காரியம். ஞானம் நிறைந்தவுடன் அந்த ஞானத்தைப் பிறருக்கும் அளித்தே தீரவேண்டும் என்ற அருளும் பிறந்துவிடும். இதனால் தான் அம்பிகை என்ற அன்பு மடுவில் குளிரக் குளிரத் தனது சிறகுகளைப் பரப்பி நீர்ப் பரப்பின் போக்குப்படி சென்று கொண்டிருந்த பரமஹம்சத்துக்கும் இப்படி ஒரு தவிப்பு ஏற்பட்டது.

குருவுக்காகச் சீடர்கள் தவிப்பதுண்டு. இங்கோ குரு சீடர்களுக்காகத் தவிதவித்தார்.

பக்தர்களைச் சோதனை செய்வதைவிட அந்தச் சேதனையை நீக்குவதில் அதிக சமர்த்தளான சர்வேசுவரி ஸ்ரீராமகிருஷ்ண தேவரின் வெந்துயரையும் துடைக்கலானாள். ஒவ்வொருவராக ஸ்ரீராமகிருஷ்ணர் என்ற மாபெரும் தெய்வீக மின்சார நிலையத்துக்கு வந்தார்கள். கௌரி பண்டிதர், பத்மலோசனர், வைஷ்ணவசரணர், சசதர தர்க்க சூடாமணி முதலிய பண்டிதர்களும் சாதகர்களும் அவரிடம் வந்தனர். பிரம்ம சமாஜ தலைவரான கேசவ சந்திர சேனர், பிரதாப சந்திர மஜூம் தார், விஜய கிருஷ்ண கோஸ்வாமி, நாக மாகாசயர் முதலிய அறிஞர்களும், அனுபூதிச் செல்வர்களும் வந்தார்கள். கிறிஸ்துவர் முகம்மதியர், சீக்கியர் இவர்களும் ஹிந்துக்களைப் போலவே நூற்றுக்கணக்கில் தட்சிணேசுவரத்தில் குழும ஆரம்பித்தனர்.

ஆனால் இதெல்லாம் ஸ்ரீராமகிருஷ்ணருக்குப் போதவில்லை. மின்சார நிலையத்திலிருந்து தங்களுக்கு மட்டும் ஒளிபெற்ற விளக்குகள் இவை. உள்ளே மோதும் மின்சார வேகம் முழுவதையும் தாங்கக் கூடிய சக்தி அவைகளிடம் இல்லை. அவ்வளவு மின்சாரத்தையும் தாங்கித் தேக்கத்திலிருந்து எடுத்துக்கொண்டு உலகம் முழுவதற்கும் ஒளிதரும் கம்பியைத் தேடிக்கொண்டிருந்தார். பகவான் பரமஹம்சர்.

அந்தக் கம்பி அதே சமயம் கடவுளைக் கண்டவருக்காகத் தேடி அலைந்து கொண்டிருந்தது. இந்த நாடு செய்த புண்ணியம், அந்தக் கம்பிக்குச் சடேரென மின்தேக்கத்தின் நினைவும் வந்துவிட்டது. நரேந்திரநாதன் ஸ்ரீராமகிருஷ்ண தேவரை வந்தடைந்து விட்டாள்.

லயம் சுருதியை வந்தடைந்துவிட்டது!

## ஞானப் பட்டறையிலே

தட்சிணேசுவரத்தில் ஸ்ரீராமகிருஷ்ண முனிவர் வசித்துவந்த அறைக்குள் பிரவேசித்தான் நரேந்திரநாதன்.

சுரேந்திரநாதரும், மற்றும் சில நண்பர்களும் நரேந்திரனுடன் வந்தனர். ஆனால் அவனோ உடன்வந்தவரை, ஏன் தன் உடல், உடை இவை பற்றியே, நினைவில்லாமல் ஒரு முகப்பட்ட மனதோடு உள்ளே பிரவேசித்தான். காந்த சக்தி வாய்ந்த அவனது கண்கள் அவனுக்குள்ளேயே துழாவிக் கொண்டிருந்தன. யாவும் அறியும் ஆற்றல் பெற்றிருந்த பரம ஹம்சருக்கு அவனுடைய ஆன் மிக நாட்டம் தெளிவாகப் புரிந்தது. லோகாயதம் பரவி விட்ட கல்கத்தாவிலிருந்து இப்படியோர் ஆன்மிக நாட்டமுள்ள இளைஞன் வருகிறான் என்று அவருக்கு ஆச்சரியமாக ஆகிவிட்டது.

தரையில் பாய் விரிக்கப்பட்டது. வந்தவர்கள் அமர்ந்தனர். ஸ்ரீராம கிருஷ்ணர் விரும்பியவாறு நரேந்திரன் சில வாங்காளிப் பாடல்களைப் பாடலானான் பிரம்ம சமாஜத்தினரின் துதிப்பாடல்களில் ஒன்றைத் தன் இதய அடிவாரத்திலிருந்து உணர்ச்சி மீறப் பாடினான்.

மனமே உன் மனைக்கு ஏகு!

*மண்ணுலகு உனக்கு அந்நிய மன்றோ*
*மாறு வேஷ மிட்டேன் மயங்கு கிறாய் இங்கே?*
*பார்க்கும் இப்பார் எல்லாம் பஞ்ச பூதமெல்லாம்*
*பரமே யன்றோ உனக்கு மட மனமே!*

என்று தொடங்கி மனதைச் சத்திய சிகரத்தின் மீதேறு மாறு அறைகூவிக் கானம் செய்தான் நரேந்திரன்.

*சத்திய சிகரத்தில் ஏறுக மனமே*
*சளைந்துவிடாமல் ஏறுக மனமே*
*சாதுக்கள் சங்கம சத்தியப் பாதையில்*
*சாவடியாய் நிற்கும் மடமனமே!*
*சாவடியில் தங்கு, சோர்வு தனை நீங்கிச்*
*சாந்தி கொள்வாய் எந்தன் மடமனமே!*

கடவுள் இருக்கிறாரா இல்லையா, கடவுளைக் காண முடியுமா, கடவுளைக் கண்டவர் உண்டா, என்றெல்லாம் எண்ணி எண்ணிச் சளைத்துக் களைத்துப் போன நரேந்திரன் தனக்குச் சாவடியான சாதுவிடம் வந்துவிட்டான்! அவருக்கெதிரிலேயே தான் சத்திய சிகரத்துக்குச் செல்லும் சாலையிலுள்ள சவாடியைப் பற்றிப் பாடினான்- அவரே அந்தச் சாவடியாக இருக்

**ஆன்மீகப் பாதை**
**ரா. கணபதி**

கப்போகிறார் என்பது தெரிந்தும் தெரியாத விசித்திர நிலையிலே.

தன்னிடம் உற்பத்தியாகும் அனுபவ மின்சாரத்தை உலகெங்கும் எடுத்துப் பாய்ச்ச வேண்டிய உபகரணம் தம்மை வந்தடைந்து விட்டது என்று பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் தெரிந்துகொண்டு விட்டார்! நித்திய சத்தியமான சர்வேசுவரி தனக்குக் கூறியதெல்லாம் சத்தியமேதான்-தன் மூலம் வேதாந்தத்தை மீண்டும் நிலை நாட்டத் திருவுளம் கொண்ட அவள் தன்னுடைய தூதர்களில் சிறந்த தூதரை அனுப்பிவைத்து விட்டாள் என்பதைத் தெரிந்து கொண்டு விட்டார் பரமஹம்சர்.

இவனுக்காகத் தான் எவ் வளவு காலம் காத்திருந்தோம்? இவனைக் காணாமல் சேயைப் பிரிந்த தாயை விட, நண்பனை பிரிந்த நண்பனைவிட, காதலியைப் பிரிந்த காதலனை விட எவ்வளவு துடித்திருந்தோம்? என்று எண்ணினார். (தொடரும்)

---

# சமாதான செயற்பாடுகளுக்கு ஐ.தே.க.வின் ஆதரவு தொடரும்

## கட்சியின் அரசியல் குழுக்கூட்டத்தில் முடிவு

(கொழும்பு)

சர்வகட்சி மாநாட்டில் தொடர்ந்தும் பங்கு பற்றுவது என்றும் அரசாங்கத்தின் சமாதான செயற்பாடுகளுக்கு முழுமையான ஆதரவினை வழங்குவதென்றும் ஐக்கிய தேசியக்கட்சி தீர்மானித்துள்ளது.



அரசாங்கம் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் நடவடிக்கைகளை காரணம் காட்டி அரசாங்கத்தின் சமாதான செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்குவதில்லை யென்ற முடிவை ஒருபோதும் எடுப்பதில்லையென்றும், இந்த இரு விடயங்களையும் ஒன்றாக குழப்பிக் கொள்வதில்லையென்றும் கட்சி முடிவெடுத்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் அரசியல் குழுக்கூட்டம் செவ்வாய்க்கிழமை மாலை கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கேம்பிறிஜ் டெரஸில் நடைபெற்றபோதே மேற்கண்ட தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்த கூட்டத்தில் கட்சியின் அரசியல் குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொண்டுள்ளனர். நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாகவும் பாதுகாப்புசூழ்நிலை தொடர்பாகவும் கூட்டத்தின்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கருத்துத் தெரிவிக்கையில்,

சர்வகட்சி மாநாட்டில் தொடர்ந்தும் பங்குபற்றவும் அரசாங்கத்தின் சமாதான செயற்பாடுகளுக்கு முழுமையான ஆதரவு வழங்கவும் எமது கட்சியின் அரசியல் குழு தீர்மானித்துள்ளது. அரசாங்கத்தின் சமாதான செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்குவது தேசிய பொறுப்பு என்று கருதி இந்த முடிவை எடுத்தோம். இருப்பினும் அரசாங்கததின் ஏனைய செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்கமாட்டோம்.

அத்துடன் இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வுத்திட்ட யோசனையை உடனடியாக அரசாங்கம் முன்வைக்க வேண்டும். நாட்டின் தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். சமாதான பேச்சுவார்த்தைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும். ஐ.தே.க.வின் உறுப்பினர்களை அரசாங்கம் இணைத்துக் கொள்வது தொடர்பாக எதிர்ப்பு போராட்டங்களை எதிர் வரும் ஆகஸ்ட் மாதத்திலிருந்து நடத்தவுள்ளோம். இந்த விவகாரத்தையும் சமாதான செயற்பாடுகளையும் குழப்பிக் கொள்ள நாங்கள் விரும்பவில்லை. இருப்பினும் அரசாங்கம் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் சமாதான செயற்பாடுகள் மீதான அர்ப்பணிப்பை வெளிப்படுத்த வேண்டும். (து)

---

# வடக்கு-கிழக்கு கல்வியியற்கல்லூரி டிப்ளோமா பட்டதாரிகள்

## சொந்த இடங்களிலேயே நியமனம் வழங்க முடிவு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள கல்வியியற் கல்லூரிகளில் டிப்ளோமாப் பாடநெறியை பூர்த்தி செய்த வடக்கு-கிழக்கைச் சேர்ந்த 276 மாணவர்களை வெளி மாவட்டங்களில் கடமையாற்ற நியமிக்கப்பட்ட நடைமுறை விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

இவர்களை மீண்டும் வடக்கு கிழக்கில் நியமனம் செய்ய கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த இணக்கம் தெரிவித்துள்ளார். இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் த.மகாசிவம் வடக்கு-கிழக்கில் 3 ஆயிரம் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் நிலவும் போது வடக்கு-கிழக் கைச் சேர்ந்த டிப் ளோமா பட்டதாரிகள் 276 பேரை வெளி மாவட்டங்களுக்கு நியமித்தது அநீதி என்பதைச் சுட்டிக்காட்டி அவர்களை மீண்டும் வடக்கு-கிழக்கிற்கே நியமிக்குமாறும் கேட்டுக்கொண்டதற்கு கல்வி அமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய வெளி மாவட்ங்களுக்கு நியமிக்கப்பட்ட டிப்ளோமா பட்டதாரிகள் உடனடியாக கல்வியமைச்சருக்கு மேன்முறையீடு செய்யுமாறு த.மகாசிவம் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

---



# பெயர் மாற்றம்


185/6, கில்னர் ஒழுங்கை, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் வசிக்கும் வேலுப்பிள்ளை ஜெயகுமார் ஆகிய நான், இன்று (12.7.2006) தொடக்கம் எனது மகளாகிய ஜெயக்குமார் கிருத்திகா தனது பெயரை ஜெயக்குமார் கீர்த்திகா என மாற்றியுள்ளார் என்றும், இன்று தொடக்கம் சகல ஆவணங்களிலும் கீர்த்திகா என்றே கையொப்பமிடுவார் என்றும் இத்தால் சகலருக்கும் அறிவித்துக் கொள்கிறேன்.

(468) வே. ஜெயக்குமார்

# கர்மவீரர் காமராஜர்

## மீள்பார்வை 25

முருக-தனுஷ்கோடி



1942ஆம் வருடத்திய போராட்டத்தில் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் ஈடுபட்டுச் சிறையில் வாடிக் கொண்டு இருந்த காலத்தில் அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் ஸ்தாபனத்தின் போக்கு அவர்களுக்கு ஏமாற்றத்தையும் ,ஆத்திரத்தையும் தந்தன. சிறையில் இருக்கின்றபோதே தொழிலாளர்களும் தொழிற்சங்கத் தலைவர்களும் காங்கிரஸ் சார்புடைய தொழிலாளர்களுக்குத் தனியான ஸ்தாபனம் ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்தை உருவாக்கி அதைப்பற்றிச் சர்ச்சை செய்யவேண்டும் என எண்ணினர்.

இந்த முயற்சியில் தொழிற்சங்கத் தலைவர்களுக்கு காங்கிரஸ் தலைவர்கள் ஆதரவு கொடுப்பார்களா என்ற அச்சமும் இருந்தது. 1945 ஆம் ஆண்டு பாதுகாப்புக் கைதிகளும் சிறை யில் வைக்கப்பட்டிருந்தவர்களும் சிறு சிறு கோஷ்டிகளாக விடுதலை செய்யப்பட்டார்கள் விடு தலையான காங்கிரஸ் காரர்கள் காங்கிரஸ் சங்கம் என்ற சிறு நிலையத்தை அமைத்துக்கொண் டார்கள் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அன்று சட்ட விரோதமாக ஆக்கப்பட்டிருந்த காரணத்தால் அதன் கீழ் மேற்படி சங்கம் இயங்குவதற்கு வழியில்லாமல் இருந்தது. அப்போது ஒதுங்குவதற்கு ஒரு இடம் கூட இல்லாமல் சென்னையில் கொண்டிச் செட்டித் தெரு4 நம்பர் வீட்டில் ஓர் அறையில் அலு வலகம் அமைத்து சிலர் வந்து போய்க்கொண்டு இருந்தார்கள் .அதற்கெல்லாம் முக்கியப் பொறுப்பு வகித்தவர் காலஞ்சென்ற முத்துரங்க முதலியார்தான் அப்போது மாலை நேரங்களில் மறைந்த திரு ராஜகோபாலனும், ஆர் வெங்கட்ராமனும் அங்கு கூடுவது உண்டு. காங்கிரஸ் சார் பான தொழிற்சங்கத்தை அமைப்பது பற்றிச் சிறையிலே உருவான யோசனையை நடை முறைக்குக் கொண்டுவர யோசித்தார்கள்.

### சிலர் வருவார்கள்.

அகில இந்திய தொழிற்சங்க காங்கிரசின் கொள்கைகளையும், போக்குகளையும் விரும்பாத ஏற்றுக்கொள்ளாத தொழிலாளர்களும் தொழிற்சங்க ஊழியர்களும் இரண்டுபேர் நான்குபேர் என்ற முறையில் அங்கு வந்து கூடுவார்கள்

ஒரு நாள் விடுதலை அடைந்த காமராஜ் காங்கிரஸ் அலுவலகம் எங்கே இருக்கிறது என்று கேட்டு தேப்பிடித்துக்கொண்டு கொண்டிச் செட்டித்தெருவில் இருந்த அலுவலகத்தக்கு வந்து சேர்ந்தார். அங்கிருந்த ஆர். வெங்கட்ராமனையும் பக்கத்திலிருந்த தொழிலாளர்களையும் பார்த்துவிட்டு இது என்ன காங்கிரஸ் தொழிலாளர் பகுதியா நல்லாச் செய்யுங்க என்று சொன்னார். அதுதான் தமிழ்நாடு காங்கிரஸ் தொழிலாளர் பகுதியின் ஆரம்பம் எனக் கூறலாம். சில மாதங்ளுக்குப் பின்பு தமிழ்நாடு காங்கிரஸ் தொழிலாளர் பகுதி என்ற பிரிவை ஏற்படுத்தியது.

### காங்கிரஸ் தொழிலாளர்

1946 ஆம் ஆண்டு சட்டசபைத் தேர்தல்கள் வந்துவிட்டன. சென்னை மாகாணத்தில் தொழிலாளர்களுக்கு என்று நான்கு சட்டசபை ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. பக்கிங்ஹாம்மில் தொழிற்சங்கம் சென்னை நகரிலுள்ள இதர ஆலைத் தொழிலாளர்கள் கோவைப் பஞ்சாலைத் தொழிலாளர்கள் தென் இந்திய இரயில்வே தொழிலாளர் ஆகியவர்களின் பிரதிநிதிகளுக்கு இந்த நான்கு ஸ்தானங்களும் ஒதுக்கப்பட்டிருந்தன. தொழிலாளர்கள் காங்கிரஸ் ஸ்தாபனத்தில் நல்ல ஆர்வம் உடையவர்களாக இருந்தார்கள். அவர்கள் ஆதரவு காங்கிரஸ் ஸ்தாபனத்திற்குத்தான் என்பதை நிரூபிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. எனவே சென்னை நகரத்தொழிலாளர் தொகுதிக்கு ஒரு காங்கிரஸ் தொழிலாளரை நிறுத்துவது என்று தீர்மானித்தார்கள்.

அகில இந்திய தொழிற்சங்கத்தின் சார்பில் அதன் தலைவரும் , சிறந்த தொழிற்சங்க நிர்வாகியுமான ப.ஜீவானந்தம் போட்டியிட்டார். காங்கிரஸ் சார்பாக ஓர் ஏழைத் தொழிலாளர் நிறுத்தப்பட வேண்டும். அவ்வாறு செய்வதன் மூல மாகத் தொழிலாளர்களிடத்தில் ஸ்தாபனம் வளர்ச்சி பெற நல்ல வாய்ப்பு ஏற்படும் என்று சிலர் வற் புறுத்தினர். அதை முழுமனதுடன் ஆதரித்து ஏற்றுக் கொண்டார். தலைவர் காமராஜ் அதன்படியே கன்னியப்பன் சட்ட சபைக்குச் சென்னை தொழிலாளர் சார்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1946 ஆம் ஆண்டிலிருந்து தொழிலாளர் இயக்கத்தில் ஒரு பெரும் போராட்டம் தொடங்கியது காங்கிரஸ் ஸ்தாபனத்தைச் சேர்ந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை வெகு வேகமாக அதிகரிக்க ஆரம்பித்தது. காங்கிரஸ் ஸ்தாபனத்தில் புதிய திருப்பம் ஏற்பட்டு தொழிலாளர் பிரச்சினையை நாட்டு பிரச்சினையாகக் காங்கிரஸ் ஸ்தாபனத்தின் பிரச்சினையாக கருத முற்பட்டார்கள் அந்தத் திருப்பத்தைத் தமிழ்நாட்டில் ஏற்படுத்தியவர் தலைவர் காமராஜ். எந்தத் தொழிலாளர் பிரச்சினையாக இருந்தாலும் அதை நேரிடையாகக் கவனிக்க ஆரம் பித்தார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் என்ற முறையில் அந்தப் பிரச்சினைகளை நேரிடையாகக் தலையிட்டுத் தீர்க்க முன் வந்தார். அராஜகத்தை விளைவிக்க வேண்டும் என்று தொழிலாளர் சிலர் தூண்டிவிட்ட சந்தர்ப்பங்களைச் சமாளிப்பதிலும் அவர் முன் நின்றார்.

கோவையில் முப்பதாயிரம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து ஒரு பெரிய நெருக்கடி ஏற்பட்டது அப்போது தலைவரும் ஆர்.வெங்கட்ராமனும் கோவைக்குச் சென்று மில் அதிபர்களுடன் விவாதித்து மந்திரி சபையுடன் கலந்தாலோசித்து அதைத் தீர்ப்பதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகள் தலைவர் காமராஜை தொழிலாளர் துணைவர் என்று உறுதிப்படுத்தியது.

பி.அண்ட் சி போன்ற பெரிய தொழிற்சங்கங்களைச் சேர்ந்த தலைவர்கள் அவ்வப்போது அவரை அணுகி ஆலோசனை கேட்டார்கள் . மதுரையில் உள்ள பெரிய ஹார்வி மில் தொழிலாளர்கள் காமராஜைத் தங்கள் சங்கத்துக்குத் தலைவர் என்று பெயர் கொடுத்தால் போதும் மற்றவைகளைத் தாங்கள் கவனித்துக் கொள்வதாக மன்றாடிக் கேட்டார்கள்.

அதிகார வர்க்கமே உருவெடுத்தாற்போல் இருந்த மலைக்காடுகளில் இருக்கும் தோட்டங்களில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்குச் சங்கங்கள் அமைப்பதற்கும் அவற்றை பலப்படுத்துவதற்கும் காமராஜ் செய்த சேவையை இன்னும் மறக்க முடியாது. தோட்டங்களில் பணியாற்றும் குமாஸ்தாக்கள் சங்கத்தின் ஆண்டுவிழாவின் போது மேற்படி சங்கத்தின் தலைவர் டாக்டர் டேனியல் ஒரு முறை தலைவர் காமராஜ் அவர்களின் உதவியும் பக்க பலமும் எங்கள் சங்கத்துக்கு இல்லாமல் இருந்தால் எங்கள் சங்கத்தின் அழிவு எப்பொழுதோ ஏற்பட்டிருக்கும் என்று கூறினார். தமிழ்நாட்டில் விவாசாயத் தொழிலாளர் ஸ்தாபனத்தை நாராயணசாமி நாயுடு உருவாக்கினார். ஆனால் அதைக் கட்டிக்காத்து வளர்த்து எல்லா விதமான உரிமைகளையும் வழங்கியது தலைவர் காமராஜ்தான். தஞ்சை ஜில்லா உழவர்களுக்கும் பண்ணையாட்களுக்கும் எந்தவிதமானபாதுகாப்பும் இல்லை. இந்த நிலையில் விவசாயத் தொழிலாளர் ஸ்தாபனத்தை ஆரம்பித்தவுடன் தலைவர் காமராஜ் அந்த இயக்கத்துக்கு ஆதரவளித்து நாயுடுவின் தோளோடு தோள் நின்றார். நாயுடு செய்துகொண்ட மாயவரம் ஒப்பந்தத்தை அன்று ரெவின்யூ மந்திரியாக இருந்த கா.நா. வெங்கட்ராவுடன் தஞ்சை ஜில்லா முழுவதும் சுற்றுப்பயணம் செய்து அமுல் நடத்திக் கொடுத்தார் காமராஜ்.

(தொடரும்)

# 24 ஆவது நாளாகத் தொடரும் உண்ணாவிரதப் போராட்டம்





தமிழர் தாயகத்தில் நடைபெறும் தமிழ் மக்கள் மீதான படுகொலைகளை கண்டித்து பிரான்சில் நடாத்தப்பட்டு வரும் கவனயீர்ப்பு உண்ணா விரதப் போராட்டம் நேற்று முன்தினம் 24ஆவது நாளாக காலை 10.00 மணிக்கு பொதுச்சுடர் ஏற்றலின் பின் அகவணக்கத்துடன் ஆரம்பமாகியது.

சேர்ஜ பெந்துவாஸ் தமிழ்ச்சங்கத்தினர் இதில் கலந்து சிறப்பித்தனர். இதன்போது தமிழர் பாரம்பரிய கலை நிகழ்வுகளும் நடைபெற்றது.

இக் கவனயீர்ப்பு உண்ணாவிரதப் போராட்டம் பல வெளிநாட்டு மக்களையும் பிரெஞ்சு மக்களையும் விசேடமாக கவர்ந்திருந்ததை காணக் கூடியதாக இருந்தது. ஐரோப்பியத் தலைமைக்கும் தாயகத்தில் எமது மக்களின் இன்றைய சூழ் நிலை பற்றியதுமான அஞ்சல் அட்டைகள் தமிழ் இளையோர் அமைப்பி னரால் மக்களின் கையெழுத்து பெறப்பட்டு அனுப்பப்பட்டு வருகின்றது. இதில் அஞ்சல் அட்டைகளை பிரெஞ்சு மக்களும் வெளிநாட்டவர்களும் பணம் கொடுத்துப் பெற்று நிரப்பிக் கொடுத்திருந்தனர். (து)

# அதிபர் பதவி வெற்றிடம்

(துன்னாலை)

வடமராட்சி கல்வி வலயத்தில் 3 பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளதாகவும் அதற்கு தகுதியுடையோர் விண்ணப்பிக்குமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

வல்வை சிவகுரு வித்தியாலயம், கரவெட்டி யார்க்கரு விநாயகர் வித்தியாலயம் என்பவற்றுக்கு அதிபர்தரத்தில் உள்ளவர்களும் , ஆசிரியர் தரம் I இல் உள்ளோரும் விண்ணப்பிக்கமுடியும்.

வல்வெட்டி விநாயகர் வித்தியாலயத்திற்கு அதிபர் தரம் உள்ளோர்கள் அல்லது ஆசிரியர் தரம் I அல்லது 2:1இல் உள்ளவர்கள் விண்ணப்பிக்குமாறும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பிப்போரில் அதிபர் தரம் உள்ளவர்கள் கிடைக்குமிடத்தில் ஆசிரியர் தரமுடையோர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படமாட்டார்கள் எனவும் விண்ணப்பப்படிவத்தினை எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னதாக வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி புலோலி என்ற விலாசத்திற்கு தபாலிலோ நேரிலோ கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்குமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.அருளானந்தம் கேட்டுள்ளார். (து-101)

# விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு

(கொழும்பு)

கல்வியமைச்சின் கீழ் உள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகளில் ஆசிரியர் கல்வி தொடர்பான தேசிய டிப்ளோமா கற்கை நெறிக்கு 2007ஆம் கல்வியாண்டிற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி 17ஆம் திகதி திங்கட்கிழமை வரை நீடிக்கப்பட்டிருப்பதாக கல்வியமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி முன்பு கடந்த ஜூன் மாதம் 26ஆம் திகதி என அறிவிக்கப்பட்டிருந்தது. (கு-7)

# நிரந்தர கட்டட வசதியின்றி முல்லைத்தீவு மகாவித்தியாலயம்

(பளை)

முல்லைத்தீவு மகா வித்தியாலயம் நிரந்தர கட்டட வசதியின்றி இயங்கி வருவதனால் ஆசிரியர்களும், மாணவர்களும் மிகுந்த சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றார்கள்.

கடந்த காலங்களில் வன் செயல்கள் மற்றும் சுனாமித் தாக்கத்தினால் இப் பாடசாலைக் கட்டடம் பெரும் சேதத்திற்கு உள்ளாகியது.

சுனாமி அனர்த்தத்திற்குப் பின்னர் பாடசாலை கட்டுவதற்கு புதிய இடம் ஒதுக்கப்பட்டு கட்டடங்களை அமைத்துக்கொடுக்க அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று முன்வந்த போதிலும், இதுவரை கட்டடம் ஆரம்பிப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. இதனால் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் ஆசிரியர்களும் மாணவர்களும் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர். (கு-7)



அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள மொராங்கோ வனப் பகுதியில் காட்டுத் தீ கொளுந்து விட்டு எரிகிறது.

# ஈராக்கில் தற்கொலைத் தாக்குதல்

## -7 பேர் பரிதாபமாகப் பலி-

(பக்தாத்)

ஈராக்கில் தற்கொலை படை தீவிரவாதி ஒருவன் உணவு விடுதியில் நடத்திய தாக்குதலில் ஏழுபேர் கொல்லப்பட்டனர். மேலும் 20 பேர் காயமடைந்தனர். ஈராக்கில் சதாம் உசேன் ஆட்சிக்குப்பிறகு அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படை பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகிறது.

இருப்பினும் அமெரிக்காவின் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து தீவிரவாதிகள் அவ்வப்போது தாக்குதல் சம்பவங்களை அரங்கேற்றி வருகின்றனர். தலைநகர் பக்தாத்தின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள உணவு விடுதிக்குள் நேற்று முன்தினம் ஒரு மர்ம நபர் நுழைந்து தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்தான். இந்த சம்பவத்தில் ஏழு பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 20 பேர் காயமடைந்தனர்.

ஈராக்கில் நடைபெறும் தீவிரவாதிகளின் தொடர் தாக்குதல்களைக்கட்டுப்படுத்துவது குறித்து ஆலோசனை செய்தவற்காக, அமெரிக்க இராணுவ அமைச்சர் ரம்ஸ்பீல்டு



முன்னறிவிப்பு ஏதும் இன்றி ஈராக் சென்றுள்ள நேரத்தில் தற்கொலைப்படை தாக்குதல் நடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# மாணவர்களை ஏமாற்றும் இடைத்தரகர்கள்

## எச்சரிக்கை விடுக்கிறது இந்திய தூதரகம்

(மாஸ்கோ)

ரஷ்யாவில் மருத்துவம் படிக்க விரும்பும் மாணவர்களை இடைத்தரகர்கள் ஏமாற்றுவதையடுத்து மாணவர்கள் நேரடியாக கல்வி நிலையங்களை தொடர்பு கொள்ளும்படி இந்திய தூதரகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ரஷ்ய நாட்டில் உள்ள மருத்துவம் மற்றும் தொழில் கல்வி நிலையங்களில் ஐந்தாயிரத்துக்கும் மேலான இந்திய மாணவர்கள் பயின்று வருகின்றனர். இதில், 99 சதவீதத்தினர் மருத்துவம் படிக்கின்றனர்.

ரஷ்ய கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் நேரடியாக சேரலாம். ஆனால் பெரும்பாலான ரஷ்ய கல்வி நிறுவனங்கள் மாணவர்களை தேர்வு செய்ய ஒப்பந்ததாரர்களை நியமித்துள்ளது. இடைத்தரகர்களாக செயல்படும் அவர்கள் மூலமே மேற்கண்ட படிப்புகளுக்கு விண்ணப்பிக்கும்படி அந்த கல்வி நிறுவனங்கள் வலியுறுத்துகின்றன.

ரஷ்யாவிற்கு வரும் புதிய மாணவர்களுக்கு ரஷ்ய மொழி தெரியாததால் விடுதி வசதி மற்றும் படிப்பு கட்டணம் ஆகியவற்றை வசூலிப்பதற்காகத்தான் ஒப்பந்த தாரர்களை அந்த கல்வி நிலையங்கள் நியமித்துள்ளது. ரஷ்யாவில் பயின்ற முன்னாள் மாணவர்கள் சிலரே இவ்வாறு ஒப்பந்ததாரர்களாக செயல்படுகின்றனர். மாணவர்களை சேர்ப்பதன் மூலம் ஒப்பந்தாரர்களுக்கு கமிஷன் கிடைக்கிறது. இதனால் அவர்கள் பொய் வாக்குறுதிகளை அளித்து மாணவர்களை ஏமாற்றுவதாக புகார்கள் வந்துள்ளன.

எனவே ரஷ்யாவில் மருத்துவம் பயில விரும்பும் மாணவர்கள் தாங்கள் பயில விரும்பும் மருத்துவ கல்வி நிலையங்கள் குறித்தும் தங்கும் வசதிகள் குறித்தும் நேரடியாக விசாரணைகளை மேற்கொள்ளலாம் என்று மாஸ்கோவில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது. (த)

# வெடிமருந்துகளுடன் பிடிபட்டான் தீவிரவாதி

## டெல்லியைத் தகர்க்கும் திட்டம் முறியடிப்பு

டெல்லி, மும்பை போன்ற நகரங்கள் எப்போதுமே தீவிரவாதிகளின் தாக்குதல் பட்டியலில் உள்ளது எனவே பாதுகாப்பு படைகள் விழிப்புடன் இருந்தாலும் அதையும் மீறி எப்படியோ அங்கு தாக்குதல்கள் நடக்கின்றன. மும்பையில் தாக்குதல் நடந்ததும் டெல்லியையும் தீவிரவாதிகள் குறி வைத்து இருக்கலாம் என்று கருதி அங்கு பலத்தபாதுகாப்பு போடப்பட்டது. நகரம் முழுவதும் சோதனை நடந்தது. அப்போது காரில் பயங்கர வெடிமருந்துடன் வந்த தீவிரவர்தி ஒருவனை மடக்கிப்பிடித்தனர்.

அங்குள்ள லோடி வீதியில் பொலிஸார் சோதனையில் ஈடுபட்டிருந்த போது காரில் ஒருவீன் வந்துகொண்டிருந்தான். அதை மடக்கி ஒவ்வொரு பகுதியை சோதனையிட்டார்கள் உள்ளே ஒரு பையில் ஆர்.டி. எக்ஸ்.மருந்தை மறைத்து வைத்து இருந்தது தெரிந்தது. மொத்தம் 2 கிலோ வெடி மருந்து இருந்தது. மேலும் அவன் வைத்திருந்த பெட்டியில் ரூ.49 இலட்சம் ரொக்க பணமும் இருந்தது. இதையாரிடமோகொடுக்க வந்தபோது பொலிஸாரிடம் சிக்கிகொண்டான்.

கைப்பற்றப்பட்ட இந்த வெடிமருந்தை வைத்து வெடிகுண்டு தயாரித்தால் டெல்லியில் உள்ள பல இடங்களை தகர்க்க முடியும். அந்த அளவுக்கு அதிகசக்தி வாய்ந்ததாகும். டெல்லியை தகர்க்கும் நோக்கத்துடன் இது கொண்டுவரப்பட்டுள்ளது. சரியான நேரத்தில் வெடி மருந்து கண்டு பிடிக்கப் பட்டதால் டெல்லி குண்டுவெடிப்பு தடுக்கப்பட்டுள்ளது. டெல்லியில் கடந்த ஆண்டு தீவிரவாதிகள் பல இடங்களில் குண்டுவைத்து தாக்குதல் நடத்தியது குறிப்பிடத்தக்கது. (த)

WORLD NEWS உலக தரிசனம்

# மும்பை தொடர் குண்டுவெடிப்பு

## உலக தலைவர்கள் கடும் கண்டனம்

(வாஷிங்டன்)

மும்பையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தொடர் குண்டுவெடிப்பு சம்ப வத்தில் 190க்கும் அதிகமான பேர் பலி ஆனார்கள். மேலும் ஏராளமான பேர் காயம் அடைந்தனர். இதேபோல் காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரில் 5 இடங்களில் குண்டுகள் வெடித்ததில் 8 பேர் உயிர் இழந்தனர் பலருக்கு காயும் ஏற்பட்டது.

இந்த குண்டுவெடிப்பு சம்பவங்களுக்கு உலக தலைவர்கள் கண்டனம் தெரிவித்திருக்கிறார்கள். மும்பையிலும் ஸ்ரீநகரிலும் நடந்த குண்டு வெடிப்பு சம்பவங்கள் பயங்கரமானவை என்றும் இதை வன்மையாக கண்டிப்பதாகவும் கூறியுள்ள அமெரிக்க ஜனாதிபதி புஷ், இந்த சமயத்தில் இந்திய அரசுக்கு ஆதரவாக அமெரிக்கா இருப்பதாகவும் கூறியுள்ளார்.

அப்பாவி மக்களை கொல்லும் இது போன்ற செயல்கள், தீவிரவாதத்துக்கு எதிராக சர்வதேசசமுதாயம் ஒருங்கிணைந்து செயல்படவேண்டும் என்ற கருத்தை வலுப்படுத்துவதாக அமையும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அமெரிக்க வெளியுறவு மந்திரி கொண்டாலிசா ரைசும் தொடர் குண்டு வெடிப்பு சம்பவத்தை கண்டித்து இருக்கிறார். குண்டுவெடிப்பை நடத்திய தீவிரவாதிகள் குற்றவாளிகள் என்றும் அவர்கள் வன்மையாக தண்டிக்கப்பட வேணடியவர்கள் என்றும் ரஷிய அதிபர் புடின் கூறியிருக்கிறார். அப்பாவி மக்களின் மரணத்துக்கு காரணமாக அமைந்த தீவிரவாதிகளின் பயங்கரவாத செயல்களை வன்மையாக கண்டிப்பதாக ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த ஜேவியர் சோலனா குறிப்பிட்டுள்ளார்.

தீவிரவாதத்தை முறியடிக்க எல்லா நாடுகளும் ஒருங்கிணைந்து செயல்படவேண்



டியதன் அவ்சரத்தையும் அவசியத்தையும் மும்பை ஸ்ரீநகர் குண்டு வெடிப்பு சம்பவங்கள் உணர்த்தி இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கோபி அனான் கூறியிருக்கிறார்.

இது கோழைத்தனமான தாக்குதல் என்றும் இதை நியாயப்படுத்த முடியாது என்றும் கூறியுள்ள இங்கிலாந்து பிரதமர் டோனி பிளேயர் தீவிரவாதத்தை ஒடுக்க இந்தியாவுக்கு இங்கிலாந்து ஆதரவாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

மும்பை குண்டுவெடிப்பு சம்பவம் ஜனநாயக வாழ்க்கை முறையின் மீதான தாக்குதல் என்றும் தீவிரவாதிகளின் தாக்குதல் தொடர்பில் உலகில் எந்த நாட்டுக்கும் பாதுகாப்பு இல்லை என்பதையே மும்பை குண்டு வெடிப்பு சம்பவம் காட்டுவதாகவும் அவுஸ்திரேலிய பிரதமர் ஜோன் ஹோவர்ட் தெரிவித்திருக்கிறார்.

குண்டுவெடிப்பு சம்பவத்தைக் கண்டித்துள்ள அவுஸ்திரேலிய வெளியுறவு மந்திரி அலெக்சாண்டர் டவ்னர் இந்திய அரசுக்கும் இந்திய மக்களுக்கும் தனது ஆதரவையும் அனுதாபங்களையும் தெரிவித்து இருக்கிறார். (த)

# விமானத் தாக்குதலில்

## 8 பலஸ்தீனர்கள் பலி

(ஜெருசலேம்)

இஸ்ரேல் விமானப்படை காஸா அருகே நடத்திய தேடுதல் வேட்டை தாக்குதலில் 2 குழந்தைகள் உட்பட 6 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். ஹமாஸ் அமைப் பின் ஆயுதப் படைப்பிரிவு தளபதி படுகாயமடைந்தார். மற்றொரு சம்பவத்தில் 2 பலஸ் தீனர்கள் கொல்லப்பட்டனர்.

முகம்மது டெயிப் ஹமாஸ் ஆயுதப் படைப்பிரிவின் தளபதியாக உள்ளார். கடந்த செவ்வாய்க்கிழமை இரவு காஸா நகரத்துக்கு அருகில் இவர் தங்கியிருந்த வீட்டின் மீது இஸ்ரேல் விமானப் படையினர் நடத்திய தாக்குதலில் அவர் காயமடைந்ததாக கூறப்படுகிறது. இவர் இங்கு தங்கி இருப்பதாக புலனாய்வுத்துறையினருக்கு கிடைத்த தகவலின் பேரில் இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறப்படுகிறது.

டெயிப் காயமடைந்து சிகிச்சை பெற்று வருவதை இதை பலஸ்தீனிய மருத்து வத்துறை அதிகாரிகளும் உறுதி செய்தனர். முன்னதாக காஸா அருகே இஸ்ரேல் விமானப்படைகள் நடத்திய 2 தாக்குதலில் 2 குழந்தைகள் உட்பட 6 பேர் இறந்தனர். 30க்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாக பலஸ்தீன பாதுகாப்புத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். (த)



மும்பை தொடர் குண்டு வெடிப்பின் எதிரொலியாக பாகிஸ்தானின் கராச்சி ரயில் நிலையத்தில் போலீசார் பயணிகளின் உடைமைகளை பரிசோதனை செய்தனர்.

நாம் பலவீனமாக இருக்கும் போதுதான் பாதுகாப்பைப் பற்றிச் சிந்திக்கின்றோம்

-ராஜாஜி

வலம்புரி

## கொழும்பைப் பாதுகாக்க அரசாங்கம் படும்பாடு

கொழும்பு மாநகரைப் பாதுகாப்பதற்காக ஆயிரம் பேரை இராணுவத்தில் புதிதாகச் சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் கூறியுள்ளார்.

இலங்கை முழுவதையும் பாதுகாக்க முற்பட்ட அரசு இப்போது கொழும்பைப் பாதுகாப்பதற்கு பெரும்பாடு படுகின்றது.

அகலக் கால் விரித்து விட்டதன் விளைவு இது என்பதை பெரும்பான்மையின மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

கடந்த காலங்களில் இராணுவத்திற்கு ஆள் சேர்ப்பதில் அரசு எடுத்த முயற்சிகள் தோல்வி கண்டிருந்தன.அதேவேளை இராணுவத்திலிருந்து தப்பி ஓடுவோரின் எண்ணிக்கை அதிகமாக இருந்ததுடன்,

இராணுவத்திலிருந்து 'தப்பியோடிகளை' கண்டுபிடிப்பதும் அரசுக்குப் பெரும் தலையிடியைக் கொடுத்தது.

இவ்விதம் படையிலிருந்து தப்பியோடியவர்கள் நாட்டின் சட்டம் ஒழுங்கிற்கு ஊறு விளைவிப்பவர்களாக மாறினார்கள்.

கூலிக் கொலை, கொள்ளை, ஆட்கடத்தல் என பல மோசடிகளிலும் தப்பியோடிய இராணுவத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

நாட்டைப் பாதுகாப்பதற்கு ஆட்களைப் படைகளில் சேர்த்த அரசு, அவர்களாலேயே உபத்திரப்படுகின்றது. உலகில் இலங்கையரசு மட்டுமே இவ்வித உபாதையை அனுபவிக்கின்றது எனலாம்.

இனப்பிரச்சினையின் ஆரம்ப கட்டங்களில் அதனை முடிபுக்குக் கொண்டுவர உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால் இராணுவத்திற்கு ஆட்சேர்க்கும் நிலைமையோ, அதீதமான பாதுகாப்பு செலவீனமோ ஏற்பட்டிருக்க மாட்டாது.

இராணுவ ஆதிக்கத்தை வலுப்படுத்துவதன் ஊடாக சுயலாபம் ஈட்ட நினைத்தவர்களின் சதித் திட்டத்திற்கு இலங்கை இலக்காகி விட்டது.

ஆயுதக் கொள்வனவில் ஏற்படக் கூடிய ஊழல் மோசடிகள் இதற்கு நல்லதோர் உதாரணமாகும். இருந்தும் இதனை இலங்கை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ளவில்லை.

இலங்கை தனித்த பௌத்த சிங்கள நாடு. இங்கு ஏனைய இனத்தவர்களுக்கோ, மதங்களுக்கோ உரிமை இல்லை என்ற நிலைப்பாட்டையே அரசு இன்னமும் கொண்டுள்ளது.

கடந்த ஒரு சில மாதங்களுக்கு முன்னர் ஜனாதிபதியின் பாதுகாப்பு ஆலோசகர் கொட்டகதெனிய படைத்தரப்பில் உள்ள உயர் அதிகாரிகள் பலர் விலை போய்விட்டார்கள் என வெளிப்படையாக கூறியுள்ளார்.

பாதுகாப்பு ஆலோசகர் மேற்கண்டவாறு கூறும் போது தமிழ் மக்களை படையினர் சோதிப்பது என்பதும் கொழும்பைப் பாதுகாக்க இராணுவத்திற்கு மேலும் ஆயிரம் பேரைச் சேர்ப்பதும் அரசின் அர்த்தமற்ற செயலாகும்.

இலங்கையைப் பாதுகாக்க முற்பட்ட அரசு இப்போது கொழும்பைப் பாதுகாக்க எடுக்கும் நடவடிக்கை வேடிக்கையே.

# இலங்கையில் திடீர் திடீரென காணாமல்போகும் தமிழர்கள்

## இருக்கிறார்களா அல்லவா என அறியமுடியாத நிலையில் உறவினர்கள்

(கொழும்பு)

இலங்கையில் தமிழர்கள் காணாமல் போவது குறித்து றொறன்ரோ ஸ்ரார் என்ற கனேடிய பத்திரிகை விரிவான கட்டுரையை வெளியிட்டுள்ளது.

அக் கட்டுரையில் , யாழில் சில வாரங்களுக்கு முன்பாக நள்ளிரவில் வெள்ளை வானில் இனந்தெரியாத குழுவினர் கனகன் சசிகரன் என்பவரது வீட்டின் முன்பாக வந்திறங்கினர். வீட்டின்பின் கதவை 15க்கும் மேற்பட்டோர் காலால் உதைத்து உடைத்தனர். அவர்களில் சிலர் கறுப்பு முகமூடி அணிந்திருந்தனர்.

வீட்டுக்குள் நுழைந்த அவர்கள் சசிகரனை (வயது-29) படுக்கையிலிருந்து இழுத்து வானில் ஏற்றினர். அவரது மனைவியின் முகத்தில் ஏ.கே.-47 ரகதுப்பாக்கி முனையினால் தாக்கினர்.

அதன்பின்னர் சசிகரன் இருப்பிடம் குறித்து எதுவித தகவலும் இல்லை. தற்போது அவரது உறவினர்கள் செஞ்சிலுவைச் சங்கத்திலும் பொலிஸாரிடமும் முறைப்பாடு செய்துமனித உரிமைகள் ஆணையத்தின் முன்பாக காத்திருக்கி றார்கள்.

கடந்த 6 மாதகாலமாக தமிழர்கள் தொடர்ந்து காணாமல் போய்க்கொண்டிருக்கின்றனர். இராணுவத்தினரோ பொலிஸாரோ சசிகரனைப் பிடித்துச் செல்லவில்லை என்று கூறுவதாக 45 வயதான சசிகரனின் உறவினர் சிற்றம்பலம் மோகனதாஸ் தெரிவித்தார்.

கடத்தப்பட்ட சகிகரன் உழவு இயந்திர [illegible]டுநராக இருந்தவர் என்றும் அவருக்கும் புலிகளுக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்றும் அவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

அவர் உயிரோடு இருக்கிறாரா? இல்லையா? எங்கிருக்கிறார்? என்ற கேள்விகளுக்கே விடை கிடைக்கவில்லை என்கிறார் மோகனதாஸ். யாழ்ப்பாணத்தில் இந்த ஆண்டு மட்டும் 100 பேர் கொல்லப்பட்டனர் என்றும் 225பேர் காணாமல் போயுள்ளதாகவும் மனித உரிமைகள் சட்டத்தரணி ரெமடிஸ் தெரிவிக்கிறார்.

அரச படைகளால் 40 பேர் கடத்தப்பட்டு கொல்லப்பட்டுள்ளமைக்கான உறுதி யான் ஆதாரங்கள் இருக்கின்றன என்றும் அவர் கூறினார்.

தமிழர்கள் கொல்லப்பட்டமை மற்றும் காணாமல்போனமை குறித்து பல முறை சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் சர்வதேச மன்னிப்புச் சபை போன்றவை எச்சரிக்கை விடுத்திருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் 5இலட்சம் தமிழர்கள் உள்ளனர் .40ஆயிரம் படையினர் உள்ளனர். யாழ். நகரில் 20 மீற்றர் இடைவெளிக்கு ஒரு இராணுவத்தினர் வீதம் நிற்கின்றனர். நகரின் மையப்பகுதிகளில் 15 பேருடன் செல்லும் இராணுவ வாகனத் தொடரணி பயணிக்கும் போது வீதியின் ஓரத்தில் ஒதுங்குமாறு பொதுமக்கள் எச்சரிக்கப்படுகின்றனர்.

ரோமன் கத்தோலிக்க அடிகளார் ஒருவரும் மனித உரிமைகள் தொடர்பான முறைப்பாட்டை செய்துள்ளார். அவரது மேசையில் காணாமல் போனவர்கள் அல்லது கொல்லப்பட்டோர் என இரு கோப்புக்களை வைத்துள்ளார்.

ஏப்ரலில் 38 பேர் காணாமல் போயுள்ளனர் .அவர்களில் 9 பேர் கண்டுபிடிக்கப்பட்டனர். மே மாதத்தில் 55 பேர் காணாமல் போயினர் .37 பேர் நிலைமை தெரியவில்லை. இந்த மாதம் இந்த எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும் அவர் கூறினார். அந்த அடிகளார் தனது பெயரை வெளியிட விரும்பவில்லை. ஆனால் எந்தக் கொலையுமே திட்டமிடப்பட்டுச் செய்யப்படவில்லை என்கிறார் இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க. மேலும் இராணுவத்தில் ஆயிரம் பேர் இருக்கிறார்கள் எனில் இருவர் மோசமானவர்களாக உள்ளனர் என்றும் ஒப்புக் கொள்கிறார். மன்னார் பேசாலை தேவாலயத்தில் கடற்படையினர் கைக்குண்டு வீசியதில் 47 பேர் காயமடைந்தனர் என்று மன்னார் ஆயர் இராயப்பு யோசப் அடிகளார் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

''இந்தக் கொடூரத்தை உலகின் வேறு எங்கேனும் நாம் காண முடியாது என்று கூறுகிறார் மனித உரிமைகள் ஆணையத்தின் சட்டத்தரணி ரெமடிஸ். இந்து ஆலயங்கள் கூட இப் போது இராணுவத்தினரின் சந்தேகத்துக்குரிய இடங்களாகி விட்டன என்றும் சுட்டிக்காட்டுகிறார் அவர்'' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## ஒவ்வொரு சிறாருக்கும் ஒரு ஆசிரியர் தேவை

(யாழ்ப்பாணம்)

பொதுநலவாய கல்வி நிதியம் யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் மற்றும் அறவழிப் போராட்டக் குழு ஆகியவற்றுடன் இணைந்து சர்வதேச நிகழ்ச்சித்திட்டம் 2006 இன் கீழ் ''ஒவ்வொரு சிறாருக்கும் ஓர் ஆசிரியர் தேவை'' எனும் நிகழ்ச்சியை யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் இன்றுகாலை 9.30மணிக்கு நடத்தவுள்ளனர்.

பொதுநலவாய நிதியத்தின் மாகாண இணைப்பாளர் ஸ்ரீ சக்திவேல் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினராக மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கமும் கௌரவ விருந்தினர்களாக சிறுபாதுகாப்பு இலங்கையின் யாழ். மாவட்ட முகாமையாளர் திருமதி ஞானச்செல்வி சிங்கேஸ்வரன் மற்றும் யாழ். மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்களும் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

இந்நிகழ்வில் வரவேற்புரையை அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் அ.இ.சிவசுப்பிரமணியமும் ஆசியுரையினை மன்னார் கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பியும், ''மெல்லக்கற்றோருக்கான நிகழ்ச்சித் திட்டத்தின் அவசியம்'' என்ற பொருளில் ஊற்று நிறுவன இயக்குநர் பொ.விக்னேஸ்வரனும், ''இலங்கை கல்வி முறையானது ஒவ்வொரு சிறாருக்கும் ஓர் ஆசிரியர் தேவை என்பதை மையப்படுத்துகின்றது'' எனும் பொருளில் பலாலி ஆசிரியகலாசாலை முன்னாள் அதிபர் கோ.பத்மநாதனும், ''தரமான கல்விக்கு ஆசிரியர் பங்களிப்பு'' எனும் பொருளில் தமிழ் ஆசிரியர்சங்கச் செயலாளர் த. பஞ்சலிங்கமும் நிகழ்த்தவுள்ளனர். சைவ வித்தியா விருத்திச் சங்க மாணவர்களின் கலை, கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. நன்றியுரையை அறவழிப்போராட்டக் குழுச் செயலாளர் எம்.கே. ஜீவகதாஸ் நிகழ்த்தவுள்ளார். (அ)

# இரு மின் உற்பத்தி நிலைய நிர்மாண பணிகள் இருவாரங்களில் ஆரம்பம்

(கொழும்பு)

நாட்டின் மின்சார நெருக்கடியை தீர்க்கும் வகையில் 1220 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் இரு மின் உற்பத்தி நிலையங்களுக்கான ஒப்பந்தங்கள் இன்னும் இரண்டு வாரங்களில் கைச்சாத்திடப்படவுள்ளன.

உள்ளூர் தேசிய நிறுவனம் ஒன்றுடனும் இந்திய அரச நிறுவனம் ஒன்றுடனும் இந்த ஒப்பந்தங்கள் இம்மாதம் 20ஆம் திகதிக்குப் பின்னர் கைச்சாத்திடப்படவுள்ளதுடன் இதற்கென 3,500 மில்லியன் டொலர்களைச் செலவிடவுள்ளதாக மின்வலு எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி திருகோணமலையில் அரசாங்கத்தினால் நிர்மாணிக்கப்படவுள்ள இரண்டாவது அனல் மின் நிலைய நிர்மாண நடவடிக்கைகள் இம்மாதம் இறுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், இது தொடர்பாக இந்திய அரசுடனான ஒப்பந்தம் எதிர்வரும் 20ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக அமைச்சு தெரிவித்தது.

முதற்கட்டமாக 500மெகாவாட் மின்சாரமும் இரண்டாம் கட்டமாக 500 மெகாவாட் மின்சாரமுமாக மொத்தம் 1000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படவுள்ளதுடன் இதற்கென 500 மில்லியன் அமெரிக்க டொலர் செலவு செய்யப்படவுள்ளது.

இது தொடர்பான ஒப்பந்தக் கைச்சாத்து நிகழ்வில் கலந்து கொள்வதற்காக இந்திய அரசு விஷேட குழுவொன்றை இலங்கைக்கு அனுப்பவுள்ளது. இந்திய அரசின் மின்சார அதிகார சபைப் பணிப்பாளர் தலைமையிலான குழுவினர் இலங்கையின் மின்வலு எரிசக்தி அமைச்சின் செயலாளருடன் மேற் படி ஒப்பந்தத்தை மேற்கொள்ளவுள்ளதாக அமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

இலங்கையின் லங்கா ட்ரான்ஸ் போமர் லிமிட்டட் இந் நிர்மாணப்பணிகளை மேற்கொள்வதுடன் இந்த டீசல் மின் உற் பத்தி நிலையத்திற்கென மூவாயிரம் மில்லியன் அமெரிக்க டொலர் செலவு செய்யப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித் தார். (அ-7)

## வறுமையொழிப்பிற்கென கணிசமான நிதி செலவு

(கொழும்பு)

இந்த வருடம் முதல் காலாண்டுப் பகுதியில் வறுமையொழிப்பு மற்றும் மனிதாபிமான நிவாரண நடவடிக்கைகளுக்கென அரசாங்கம் கணிசமானளவு நிதியை செலவிட்டிருப்பதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.


இக் காலப் பகுதியில் சுகாதாரம், திறன் அபிவிருத்தி கல்வி, போன்றவற்றுக்காக.37 பில்லியன் ரூபாவை அரசாங்கம் செலவிட்டுள்ளது.

வைத்தியசாலைகள், அரசாங்கப் பாடசாலைகள் போன்றவற்றிற்கு இந் நிதி வழங்கப்பட்டுள்ளது. அரசாங்கம் 200 கணனி நிலையங்களை ஏற்படுத்தியிருப்பதாகவும் நிதியமைச்சு தெரிவித்துள்ளது. இதற்கு மேலதிகமாக கிராமிய பாடசாலைகளுக்கு சூரிய ஒளி மூலம் மின்சாரத்தைப் பெற்றுக் கொடுப் பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

சமுர்த்தி உதவி பெறுவோர் மற்றும் உரமானியத்திற்காக 17.35 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் நிதியமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (து-7)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



ஊஞ்சலை ஆட்டிவிட்டால் மேலும் கீழும் ஆடுகிறது. ஆட்டாவிட்டால் அப்படியே நிற்கிறது. அதேபோல் உலக ஆசைகளால் மனம் அலைக்கழிக்கப்படுகிறது. ஆசை இல்லாத மனம் ஸ்திரமாக ஆண்டவன் பாத கமலங்களில் நிற்கிறது.

சுவாமி விவேகானந்தர்

# ஒற்றையாட்சியின் கீழான அதிகாரப் பகிர்வுக்கு ஆதரவு

## ஜாதிக ஹெலஉறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு ஒற்றையாட்சியின் கீழான அதிகாரப் பகிர்வையே ஆதரிப்பதாக ஜாதிக ஹெலஉறுமயவின் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

மகிந்த சிந்தனையில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி ஒற்றையாட்சியின் கீழ்தான் அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்பட வேண்டும். ஒற்றையாட்சி அம்சம் உடைய அரசியல் யாப்பு என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

எந்தவொரு கூட்டமைப்பு முறையையும் சேர்க்க முடியாது என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் சட்ட ஆலோசகர் வி.உருத்திரகுமார் அண்மையில் தெரிவித்துள்ளார்.

ஆகையால் 'ஐக்கிய' கோட்பாட்டின் கீழ் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

தனியரசு நிலைபாட்டில் அவர்கள் தெளிவாகவுள்ளனர். பயங்கரவாதிகளின் விருப்பங்களை எல்லாம் நாம் பரிசீலித்துக் கொண்டிருக்க முடியாது.

இந்திய கூட்டாட்சி முறையைக் கூட அவர்கள் விரும்பவில்லை என்பதையே மும்பை குண்டு வெடிப்புச் சம்பவம் எடுத்துக் காட்டுகின்றது என்றார் சம்பிக்க ரணவக்க.

இதேவேளை இனப்பிரச்சினைக்கு மேலதிக அதிகாரப் பகிர்வுதான் தீர்வாக இருக்க முடியும். அதன்ஊடாகத்தான் நாட்டினது இறைமையையும் பிரதேச ஒற்றுமையையும் பாதுகாக்க முடியும். அத்தகைய ஒரு நிலைப்பாட்டினால் நாடு பிளவுபடும் என்று நாம் கருதவில்லை.

மகிந்தவின் கடைசியான நிலைப்பாட்டின் மூலம் யதார்த்தத்தை அவர் புரிந்து கொண்டிருப்பதாகத் தெரிகின்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இருந்த போதும் இந்த புதிய அணுகு முறையை ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமயவினர் ஏற்கின்றார்களா என்பதை மகிந்த ராஜபக்ஷ தெளிவுபடுத்த வேண்டும்.

அவர்களும்இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொண்டால் மதிப்பு மிக்க உயிர்கள் காப்பாற்றப்படும் என்றார்அவர்.

(ச-5)

## இரண்டு இளைஞர்கள் திருமலையில் சுட்டுக் கொலை

(திருகோணமலை)

திருகோணமலை பாம்போட்டாறு மங்கி பிரிட்ஜ் பகுதியில் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் இரு தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

மங்கி பிரிட்ஜ் பகுதியில் நேற்று முன்தினமிரவு 8.45 மணியளவில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினர் இத் துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளனர்.

கொல்லப்பட்டோரில் ஒருவர் கெயர் சர்வதேச அமைப்பின் பணியாளரான ஆரியம்பன் பேஞ்சர்அம்மன் கோவில் வீதியைச் சேர்ந்த எம்.சுரேஸ்குமார் (வயது-24) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.மற்றவர் அடையாளம் காணப்படவில்லை.

கொல்லப்பட்டோரிடமிருந்து ரி-56ரக துப்பாக்கி இருந்ததாகவும் 40 மில்லி மீற்றர் கைக்குண்டு செலுத்தி இருந்ததாகவும் இராணுவத்தினர் தெரிவித்தனர்.

(ச-5)

## பொலிஸாரை விடுவிக்க உறவினர்கள் கோரிக்கை

(கொழும்பு)

விடுதலைப்புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரி வீரசிங்க மோபிட்ட கொடவை விடுதலை செய்யுமாறு அவரது குடும்பத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த வருடம் செப்ரெம்பர் 9 ஆம் திகதி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அனுமதியின்றி நுழைந்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள இவரை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு அரச சமாதான செயலகம், போர்நிறுத்த கண்காணிப்புக் குழு ஊடாக கடிதம் அனுப்பியுள்ளது.

இதேவேளை அரசாங்க சமாதான செயலகத்தின் கடிதத்தைக் கண்காணிப்புக் குழு தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்திற்கு அனுப்பி வைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-5)

## நீதிபதி அச்சுறுத்தப்பட்டமைக்கு சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

மேலதிக நீதிபதி சிறிநிதி நந்தசேகரன் இராணுவத்தினரால் அச்சுறுத்தலுக்கும் அவமரியாதைக்கும் உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட சட்டத்தரணிகள் சங்கங்களின் யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி செல்வி சாந்தா அபிமன்யுசிங்கம் தலைமையில் யாழ்ப்பாண நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மேலதிக நீதிபதி சிறிநிதி நந்தசேகரனுக்கு இராணுவத்தால் ஏற்படுத்தப்பட்ட அச்சுறுத்தலையும் அவமரியாதையையும் அறிந்து யாழ்ப்பாண மாவட்ட சட்டத்தரணிகள் அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளனர்.

நீதி நிர்வாகத்தில் நீதிபதிகளின் இடம் புனிதமானதும் போற்றுதற்கும் உரியதுமான தொன்றாகும். சமுதாயத்தில் நீதிபதிகளுக்கு உயர்மதிப்பும் மரியாதையும் அளிக்கப்பட வேண்டும்.

நீதியை நிலைநாட்டுவதில் அச்சமும் தலையீடும் இன்றி பாரபட்சமற்ற முறையில் நீதிபதிகள் பணியாற்றுவதற்கு சட்டத்தையும் ஒழுங்கையும் நிருவகிக்கும் துறையினர் நீதிபதிகளுக்குரிய கௌரவத்தையும் மரியாதையையும் உறுதிப்படுத்துவதில் முனைப்போடு செயற்படுவது இன்றியமையாததாகும்.

நீதிபதிகள் அச்சுறுத்தல்களுக்கும் அவமரியாதைக்கும் உள்ளானால் நீதிநிர்வாகம் என்பது கேலிக்குரியதாகிவிடும்.

இராணுவத்தினால் ஏற்படுத்தப்பட்ட அச்சுறுத்தலும் நடவடிக்கையையும் அவமரியாதையையும் யாழ்ப்பாண மாவட்ட சட்டத்தரணிகள் சங்கங்கள் வன்மையாகக் கண்டிப்பதோடு எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் ஏற்படாதவண்ணம் சம்பந்தப்பட்ட தரப்பினர் உறுதி செய்ய வேண்டும் என்றும் பகிரங்க வேண்டுகோள் விடுக்கின்றனர்.

நீதி நிர்வாகத்தில் நீதிபதிகளின் உயர் மதிப்பையும் கௌரவத்தையும் பேணிப் பாதுகாப்பதில் யாழ்ப்பாண மாவட்ட சட்டத்தரணிகள் அனைவரும் ஒரு மனதோடு செயற்படுவது எனவும் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

இக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட இத் தீர்மானத்தில் பிரதிகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பிரதம நீதியரசர் சரத் என். சில்வா, யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி தியாகேந்திரன், இலங்கை சட்டத்தரணிகள் சங்கச் செயலாளர், இலங்கை இராணுவத்தின் யாழ்ப்பாண கட்டளைத் தளபதி ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ச-133)

## காணாமல்போன சிறுவனை உறவினர் கண்டதாகத் தகவல்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் 8 ஆம் தர மாணவனான அராலி வீதி சங்கானையைச் சேர்ந்த ஜீவராஜா ரதிராஜா என்ற 13 வயதுச் சிறுவன் கடந்த 11-ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளதாக அவரது தாயார் ஜீவராஜா சிவபாக்கியம் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

ஆனால் இச் சிறுவனை நாவற்குழிப் பகுதியில் சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்ததை 12 ஆம் திகதி கண்டதாக அச்சிறுவனின் உறவினர் ஒருவர் சிறுவனின் தாயாரிடம் தெரிவித்ததையடுத்து அச்சிறுவன் தொடர்பான தகவல் ஏதாவது கிடைத்தால் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவிற்கு அறிவிக்குமாறு இணைப்பதிகாரி சுவேந்திரராஜா தெரிவித்துள்ளார். (து-133)

## தயா மாஸ்டருக்கு கொழும்பில் சிகிச்சை ஜாதிக ஹெல உறுமய கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஊடகப் பிரிவு ஒருங்கிணைப்பாளர் தயா மாஸ்டருக்கு கொழும்பில் சிகிச்சையளிக்கப்படுவதற்கு ஜாதிக ஹெல உறுமய எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்புடைய நபர் ஒரு துரோகியாவார். தயா மாஸ்டருக்கு சிகிச்சையளித்துள்ளதன் மூலம் அவரது பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் உதவுகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்பில் அரசாங்கம் இரட்டை நிலைப்பாட்டை மேற்கொண்டு வருகின்றது. அதேபோல் வட அயர்லாந்து அரசியல் துறைப் பொறுப்பாளர் மார்ட்டின் மக்கின்ஸ் கிளிநொச்சி சென்று வருவதற்கு அரசாங்கம் பாதுகாப்பான பயண ஏற்பாடுகளை செய்து கொடுத்துள்ளமை கண்டனத்துக்குரியது.

இந்த இரு பயணங்களுக்கும் பொறுப்பானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். அரசாங்கம் அவர்களைக் கண்டிக்காது விட்டால் எதிர்கால படுகொலைச் சம்பவங்களுக்கு அவர்களே பொறுப்பு என ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் ஓமல்பே சோபித தேரர் கூறியுள்ளார். (ச-5)

## இலங்கை இளைஞன் கொச்சியில் கைது

(திருவனந்தபுரம்)

போலி பாஸ்போட்டுடன் கனடாவுக்குச் செல்ல முயன்ற இலங்கை இளைஞன் கொச்சி விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

மும்பைக் குண்டு வெடிப்பைத் தொடர்ந்து இந்தியா முழுவதும் விமானநிலையம், ரயில் நிலையம்,மக்கள் கூடும் பகுதிகளில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

கொச்சி விமான நிலையத்தில் ரெட்அலர்ட் அறிவிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து விமான நிலையத்தைச் சுற்றி பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

பயணிகள் தீவிர சோதனைக்குப் பின் விமான நிலையத்திற்கு அனுப்பப்பட்டனர். நேற்று முன்தினமிரவு 10 மணியளவில் சிறிலங்கன் ஏயர்லைன் விமானத்தில் கனடா நாட்டிற்குச் செல்ல முயன்ற இளைஞனின் பாஸ்போட்டை சோதனையிட்டபோது அது போலி என்பது தெரிய வந்தது.

விசாரணையில் அவரது பெயர் ரஜனிகாந் (வயது-26) என்றும் அவர் கொழும்பைச் சேர்ந்தவர் என்றும் தெரியவந்தது. அவரிடம் இருந்த கனடா நாட்டு பாஸ்போட்டை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

இவர் விடுதலைப்புலியாக இருக்கலாமா என்பது குறித்து விசாரணை நடக்கின்றது.

கடந்த இரு வாரங்களுக்கு முன் இதே விமான நிலையத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் போலி பாஸ்போட்டுடன் லண்டன் செல்ல முயன்றபோது பிடிபட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## கருணா குழுவின் ஆயுதங்...

புலிகள் எதிர்பார்த்தல் அது சாத்தியமில்லை.

இந்த நாட்டில் விடுதலைப்புலிகளுடனும் கருணாகுழுவினருடனும் யுத்தம் நடத்த வேண்டிய நிலைமை ஏற்படும்.

இருப்பினும் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க உரிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும். கருணா குழு அல்லது வேறு ஒரு ஆயுதக் குழுமீதும் இது விடயத்தில் கடுமையாக நடந்து கொள்ளப்படும் என அச் செவ்வியில் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

நாட்டின் இறைமைக்கு ஏதேனும் அச்சுறுத்தல் ஏற்பட்டால் அதை எதிர்கொள்வதற்கு இராணுவத்தில் தொடர்ந்து இளைஞர்கள் சேர்க்கப்படுவார்கள்.

நாங்கள் அமைதிப் பேச்சுக்கள் ஊடே தீர்வு காண விரும்புகின்றோம். இருப்பினும் ஒரு கொடூரமான சர்வதேச பயங்கரவாத அமைப்புடன் பேச்சுக்கள் நடத்துகின்றோம் என்பதையும் நினைவில் கொண்டுள்ளோம்.

நாங்கள் எந்த ஒரு மோசமான நிலைமையையும் எதிர்கொள்ளத் தயாராகவுள்ளோம். ஏனெனில் 19.5 மில்லியன் மக்களுக்கும் அவர்களது சொத்துக்களுக்கும் நாங்கள் பொறுப்பானவர்கள்.

ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சிக் காலத்தில் அதுகிரிய மில்லினியம் சிற்றி நடவடிக்கையானது பாரிய துரோகம். அச் சம்பவத்தைத் தொடர்ந்து நாங்கள் இராணுவப் புலனாய்வுப் பிரிவை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளோம்.

வளர்ச்சியடைந்த நாடுகளில் கூட புலனாய்வுத் துறையினருக்கு நிதி உள்ளிட்ட அனைத்துவசதிகள் இருந்தபோதும் கூட பயங்கரவாதிகள் வெற்றிகரமாக ஊடுருவி விடுகின்றார்கள்.

சில சம்பவங்களில் குறைபாடுகள் காரணமாக இருக்கலாம். ஆனால் இது எமது புலனாய்வுத் துறையின் குறைபாடு அல்ல என்றார் ஹெகலிய ரம்புக்வெல. (ச-5)

## பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தெற்கு, மேற்கு கலாசார பேரவையின் பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் 17 ஆம்திகதி பிற்பகல் 3 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு பிரதம செயலர், கலைஞர்கள், கலை ஆர்வலர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-5)




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.07.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.